தென்மொழி

ஆசிரியர்: பெருஞ்சித்திரன்

தமிழர்க்குத் தமிழ் உயிர்!

தமிழ்ப்பற்றை ஊட்டாத தமிழ்க்கல்வி

தமிழர்க்குத் தீங்கு செய்யும்!

தமிழ்ப்பற்றை எழுப்பாத கணக்காயர்

தருந்தமிழால் தமிழர் தாழ்வர்!

தமிழ்ப்பற்றை வளர்க்காத மாணவரால்

தமிழ்நாட்டைக் கேடு சூழும்!

தமிழ்ப்பற்றுக் கொள்ளாத தலைவரெல்லாம்

தமிழ்நாட்டுப் பகைவ ராமே!

○

25 காசுகள்

15-4-60

இலக்கியத் திங்கள் ஏடு

கட்டுரை, கதை, பாட்டு எழுதுவார் கருத்துக்கு

தென்மொழிக்கு அன்பர், மாணவர் பலரிடமிருந்தும் கட்டுரை, கதை, பாட்டு முதலியன அளவிறந்து வந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் அளவுகண்டு மகிழவும், உட்பொருளும், நடையுங் கண்டு வருத்தமும் அடைகின்றேம். வருகின்ற உருப்படிகளுள் பாட்டுக்களே மிகுத்திருக்கின்றன. அவை முற்றும் பிழைபட்டிருப்பதுடன், உயர்வான கருத்துக்களையும், தம்முட் கொண்டிராமல் விளங்குகின்றன. சிலர் அளவிறந்த பக்கங்களில் எழுதிக் குவித்திருக்கின்றனர். தென்மொழியில் மூன்று நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அவரைக் கேட்டுக்கொள்கின்றேம். மேலும் அவர் கீழ்வருவனவற்றையும் கருத்திற்பதிக்க வேண்டுகின்றேம்.

1 மாணவரும், பிறரும் எழுதும் உருப்படிகளை ஆங்காங்குள்ள நல்ல தமிழ் ஆசிரியரிடமும், தமிழ் அறிஞரிடமும் காட்டிச் செம்மை செய்யப்பெற்று அனுப்புதல் வேண்டும்.

2. அனுப்பியவுடனேயே தென்மொழியில் வராமையால் கவலுற வேண்டாம். நல்ல உருப்படிகள் காலந் தாழ்ந்தேனும் உறுதியாய் வெளிவரும்.

3. தென்மொழியில் வராதனவும், திருப்பிப்பெறப் போதிய அஞ்சற்றலை வைக்கப்பட்டனவும், உடனுக்குடனன்றியேனும், எவ்வாருயினும் அவற்றை எழுதிய ஆசிரியர்க்கு வந்தேதீரும்.

4. அவைபற்றிய எவ்வகை மடலும் எழுதப்படமாட்டாது.

5. அச்சுக்கு வராக் கட்டுரை, கதை, பாட்டு அத்தனையும் காக்கப்படுகின்றமையால், முன்னல் அஞ்சற்றலையனுப்பத் தவறியவரும் பின்னல் அனுப்பி அவற்றைத் தருவித்துக்கொள்ளலாம்.

6. நல்ல தமிழில், நல்ல கருத்துப்பற்றி, எழுதப்பட்ட கட்டுரை, கதை, பாடல்களே வெளிவரத்தக்கன.

— ஆ. ர்.

கருத்திற் பதிக்க

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்ருல் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

— ஆசிரியர்.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் க	திருவள்ளுவராண்டு ௧௯௯௧ சித்திரைத்திங்கள் ௨ (15-4-60)	இசை ௧௬

இலக்கிய வாணிகர்

வாணிகம் கருதுவோர் எவரோ அவர் வாணிகர். 'வாணிகம்' எனும் சொல் ஊதியம் என்று பொருள்படும். 'வாணிகப் பரிசிலன் அல்லேன்' (புறம் 208) எனும் சொற்றொடர்க்கு 'ஊதியமே கருதும் பரிசிலன் அல்லேன்' என்று பொருள்கொண்டார் உரையாசிரியர்.

வாணிகர் பல்வகைப்படுவர். சிறு கைப்பொருளை முதலாக வைத்துப் பொய்ப்பொருளை ஈட்டுவார் சிலர். கைப்பொருளற்றோர் சிலர், வாய்ப்பொருளையே முதலாக வைத்து ஏய்ப்புச்செய்து வாழ்க்கை நடத்துதலும் உண்டு. வாய்ப்பொருளும், கைப்பொருளும் இலராகி, எழில்பெற்ற பாவையர் சிலர் மெய்யை(உடலை)யே முதலாகக்கொண்டு வாயால் உண்டு வயிறு கழுவுதலும் ஒருவகை வாணிகமே. இவ்வாறு எவ்வகை வாணிகமும் செய்ய ஏதுமிலராகி, அறிஞர் எழுதிவைத்த நூல்களைப் பாடஞ்செய்து எழுத்தறக்கற்று, ஏடறப் படித்தவர் போல, முழுத்திறன் அறியா மூட மாந்தரின் குழுத்திறன் கண்டு குரலெடுத்துப்பேசி குடல் கழுவுவார் சிலர். இத்தகையோர் ஓர் இருபது முப்பது ஆண்டுகட்கு முன் தமிழ்நாடெங்கும் பல்கியிருந்தனர். அவர் கம்ப இராமாயணக் கதையினையும், பாரதக் கதையினையும் இடையிடையே பாட்டும், நடிப்புமாகப் பொழுதுபோக்கறியாப் புன்மை மாந்தரிடை அழுது புலம்பிப் பொருளீட்டி வந்தனர். இத்தகைய வாணிகத்திற்குத் தேவை

யான முதல் இரண்டு. ஒன்று கதைப் புத்தகம்; இரண்டு கைவிளக்கு. நாகரிகம் முற்றி முதிராத காலமென்று கருதும் அக்காலம்போல் இராமாயண பாரதக் கதைப்பொழிவு அல்லாமல், நாகரிகம் காய்த்துக் கனிந்ததாகக் கூறப்படும் இக்காலத்தே சிலப்பதிகாரம், திருக்குறள், முதலிய நூல்களை வைத்துக் கொண்டு பனிமலையேகித் தனித்திறல் கனகவிசயரை ஒடுக்கி அவர் தலைமேற் கற்கொணர்ந்து கண்ணகிக்குப் படிவம் சமைத்த பான்மையையும், உலகம் உய்ய ஒரு நூல் எழுதி அளவிலாப் பெருப்புகழ் அள்ளிய புலவன் பொய்யில் வள்ளுவன் மெய்யறிவுரையையும் நாத்தழும்பேற, வாய்நரம்பு வலியெடுக்க வான் முட்டும் இடிக்குரலில் முழங்கி, அதனால் வரும் பெருமையாலும் பொருளாலும் வாழ்க்கை நடத்துகின்ற ஓரிருஉண்மைத் (!) தமிழரையே **இலக்கிய வாணிகர்** என்று குறிக்கின்றோம்.

மேனாட்டு மொழிகளாகிய ஆங்கில, உருசிய மொழிகளில் பண்டை இலக்கியங்களின் வழியில் மக்கள் வாழ்க்கைக்கு ஒத்த புதுமை நூல்கள் பற்பல ஆக்குகின்றனர். முந்து தமிழ் வாழ்ந்த செந்தமிழ் நாடாகிய இந்நாட்டிலோ, கழகத் தமிழ் நூல்களின் பெயர்வரிசைகளைப் படித்துப் பாடஞ்செய்து பண்டைப் பெருமையை மலைமலையாகப் பாடிக் குவிக்கின்றனரே யல்லாமல், ஒரு சிறுநூல்தானும் தம் முழுத்திறம் வெளிப் படுமாறும், மாந்தர் முழுப்பயன் எய்துமாறும் எழுதுகின்ற இலக்கியப் புலவர் இலரென்றே கூறுவோம்.

திருக்குறளிற் கூறிய கருத்துக்களை முற்றும் முறையே ஆயாதவரும், அல்லது அச்செந்நெறி நூலிற்கூறிய கருத்துக்கள் பலவற்றில் ஒன்றிரண்டையாவது தம் வாழ்வு நெறியாகக் கொள்ளாதவரும், அதுவுமல்லாது அக்குறளுக்கு ஓர் நல்லுரையோ, மொழிபெயர்ப்போ செய்யாதவரும், அதுவுமன்றி அக்குறள் படித்த ஓரிரு தமிழர்க்கு நல்லறம் ஒன்றும் ஆற்றாதவரும், திருக்குறள் ஒன்றைக் கையிலேந்தித் தண்டமிழ் நாட்டை வலம்வருதலும், அஃதேபோல் சிலம்பைக் கையிலேந்திச் சிலம்பு விலை பகர்ந்து ஒரு சிலர் வாழ்வு நடத்துதலும், இன்னும் கம்ப இராமாயணத்தையும் வில்லி பாரதத்தையும் தோளிலும் முதுகிலும் சுமந்து கோயில் குளம் கண்ட ஞான்றைத் துண்டை விரித்துப் போட்டு வாணிகம் நடத்துதலும், அன்றி, மக்கள் நலம்கருதி இத் தொல்மரபுத் தென்தமிழர் செய்துவரும் சிறப்புச் செயல்கள் என்னே? என்று தமிழ்ப்பெரு மக்களே எண்ணிப் பாரீர்.

திருக்குறள் கற்றவரெல்லாம், கற்றவழியில் நின்று தம் வாழ்வின் எஞ்சிய பகுதியைக் கழிக்கச் சிறிதும் எண்ணுமைலும், அல்லது கற்றதைத் தம் உற்றார் உறவினர்க்கு எடுத்துச் சொல்லிக் கோடியடுக்கி அதன்மேல் குப்புற வீழ்ந்து கிடப்பாரைத் தட்டி யெழுப்பித் தண்டா ஈகை குன்றாச் செய்ய எள்ளளவும் முயலாமலும், கற்றுக்கொண்ட திருக்குறளுக்குச் சொல்லுரை என்றும், நல்லுரை என்றும், தேர்வுரை என்றும், தெளிவுரை என்றும், ஆய்வுரை என்றும், அகலுரை என்றும், அறிவியற் பொருத்த உரை என்றும், அளவிலா உரை நூல்களை எழுதிக் குவிப்பதும், பொதுமக்கள் ஒருரையும் கல்லாமல், ஒவ்வோருரையிலும் ஒன்றிரண்டு கற்று உரையாசிரியர் மண்டைகளிற் தந்தம் மண்டைகளை முட்டி மோதிக் கெட்டுச் சோர்கின்றதும் ஈண்டு தமிழ்நாட்டில் நடந்துவருகின்ற பெருஞ்செயல்களாம்.

இத்தகைய வாணிகங்களைச் செய்துவருகின்ற இலக்கிய வாணிகர் நம் நாட்டில் பெருகப் பெருக மெய்மை இலக்கியத்திற்கும், உண்மைப் புலவர்க்கும், புன்மைப் புலவர்க்கும் வேற்றுமையறியாமல் பொதுமக்கள் குன்றுமுட்டிய குருவிபோல் மயங்கிப்போவர் என்றும், அவ்வாறு மயங்கின் இலக்கிய வளர்ச்சி, தளர்ச்சியுற்றுப் போமென்றும் சொல்லவும் வேண்டுங்கொல்!

நூற்பயிற்சி குறைந்துள்ள ஒருசிலர், வேறு சிலர் எழுதியதைத் தாம் எழுதியதைப்போல் எடுத்தாளலும், சிறப்பான நூல் ஒன்றும் எழுதாமல் ஒருமுறையே படித்து ஒழிக்கும் நூற்களை எண்ணிறந்து எழுதிக் குவிக்கும் நூல் எண்ணிக்கை நுண்புலவோர், தாம் எழுதிய நூல்களின் எண்ணிக்கையைக் கூறிப் பெருமையுறுதலும், தமிழ்நாட்டில் பெருநோய்களெனப் பரவிவருகின்றன. இத்தகைய இலக்கிய வாணிகருக்கு ஒன்று சொல்வோம். ஊற்றெனத் தோன்றிக் காலெனப் படுத்துச் சிலிர்த்து ஓடும் ஆற்றின் இருமருங்கிலும் பற்பல கிளைகள் பிரிந்துபோய்ப் பல்வேறு இடங்கட்குப் பாயினும், அந்நீரின் உண்மைப் பிறப்பிடம் எவ்வாற்றானும் அறியப்படும் என்றும், காற்றால் நெருங்கிய கல்லும் மண்ணும் சேர்ந்த மணல்மேடுகள் பலவானாலும், பனிமலையெனத் தோன்றி நிற்கும் தனிமலைக்கு என்றென்றும் பெருமை யுண்டென்றும் அன்னவர் அறிய வேண்டுகின்றோம்.

பொதுமக்கள் விருப்புகின்றனர், என்று இழிந்த நடையில் இழிந்த கருத்துக்களை நாகரிகம் எனும் பெயரால் கூறியும் எழுதியும் வருகின்ற இலக்கிய வாணிகரையும் ஈண்டு

குறிப்பிட விரும்புகின்றோம். அன்னவர் கடல் நீரில் கற்கண்டைக் கரைத்து இனிக்கின்றது என்னும் புல்லியரேயன்றி வேறிலர். அன்னவர் வரைந்த இலக்கியங்கள் எனப்படும் சொற்குப்பைகள் காலமென்னும் காற்றுக்கு எவ்வாற்ருனும் நிலை நிற்காதென்பதை அத்தகையோர்க்கு அறிவுறுத்துகின்ருேம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாயினும் ஆங்கிலமொழியில் உள்ள சேக்சுப்பியர் இலக்கியங்கள்போல், தமிழ்மொழியில் உள்ள திருக்குறளும், கழக இலக்கியங்களும் அழியாமல் என்றும் நிலவினும் நிலவும். அத்தகைய இலக்கிய ஆலமர நிழல்களில் மாந்தர் என்றும் நின்று மனங்களிப்பினும் களிப்பர். ஆனுல் அப்பொழுதைக்கப்பொழுது நிழல்தரும் **குடை இலக்கியங்கள்** அப்பொழுதைக்கப்பொழுதே மாய்ந்துவிடும் தன்மையுடையன. இத்தகைய இலக்கியங்கள் தமிழ்நாட்டில் மலிவதைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும். வெறும் பண்டைப் பாடல்களுக்கு உரையும் நிரையும் கூறிக்கொண்டு தம்மைப் பெரும்புலவர் என்றும், பேரறிஞர் என்றும், கூறிக்கொண்டு தமிழ்நாட்டில் வாளா வலம்வரும் புலைப்புலவர்—தமிழ்நாட்டின் இலக்கிய வளர்ச்சியைக் கொடுக்கவந்த **நச்சுப்பொய்கைகள்** என்று பொதுமக்கள் கருதுதல்வேண்டும்.

"இந்த ஆசிரியர் இப்படிக் கூறுகிருர்; அந்த ஆசிரியர் அப்படிக் கூறுகிருர் என்று வாய்வீச்சு வீசி, அவருள் எவர் கூற்றுப்படியும் நில்லாமல் பொய்மையும், போலியும் கொண்ட இலக்கிய வாணிகர் தம்மை எவரும் போற்றுதல் கூடாது.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்குத் தக்கக் கருத்துக்களை இக்கால நிலைக்கும் நடைக்கும் பொருந்தக் கூறும் உண்மைப் புலவர் எந்தப் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கின்ருர் என்று கண்டறிந்து அவரைப் போற்றுதல் வேண்டும். தமிழ் மக்களை உலக மக்களோடு ஒப்பவைத்துப் பேசுங்கால் வெறும் பண்டைப் பெருமைகளால் எள்ளளவும் பயனில்லை. திருவள்ளுவர் உயர்ந்தவர்; சிறந்தவர்; அவர் உருவம் இப்படி; அவர் இன்ன இனத்தவர்; அவர் வரலாறு இது; என்று கண்டறிந்தார் போல் பிதற்றிப் பேசுவதைவிட, திருவள்ளுவர் இன்ன கூறுகின்ருர்; அவற்றுள் இவை வழியில் யான் நிற்கின்றேன். நீங்களும் நிற்கக் கடவீராக" என்று மொழியும் தமிழ்த்தொண்டரே உண்மை இலக்கியத் தொண்டராம். அக்கருத்துக்களை ஒட்டி எழுதும் ஆசிரியரே உண்மை இலக்கிய ஆசிரியராம். அவர் கூற்றுக்களே வாழ்க்கைக்கு வேண்டுவனவாம்.

குறிப்பிட விரும்புகின்றோம். அன்னவர் கடல் நீரில் கற்கண்டைக் கரைத்து இனிக்கின்றது என்னும் புல்லியரேயன்றி வேறிலர். அன்னவர் வரைந்த இலக்கியங்கள் எனப்படும் சொற்குப்பைகள் காலமென்னும் காற்றுக்கு எவ்வாற்றானும் நிலை நிற்காதென்பதை அத்தகையோர்க்கு அறிவுறுத்துகின்றோம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாயினும் ஆங்கிலமொழியில் உள்ள சேக்சுப்பியர் இலக்கியங்கள்போல், தமிழ்மொழியில் உள்ள திருக்குறளும், கழக இலக்கியங்களும் அழியாமல் என்றும் நிலவினும் நிலவும். அத்தகைய இலக்கிய ஆலமர நிழல்களில் மாந்தர் என்றும் நின்று மனங்களிப்பினும் களிப்பர். ஆனால் அப்பொழுதைக்கப்பொழுது நிழல்தரும் **குடை இலக்கியங்கள்** அப்பொழுதைக்கப்பொழுதே மாய்ந்துவிடும் தன்மையுடையன. இத்தகைய இலக்கியங்கள் தமிழ்நாட்டில் மலிவதைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும். வெறும் பண்டைப் பாடல்களுக்கு உரையும் நிரையும் கூறிக்கொண்டு தம்மைப் பெரும்புலவர் என்றும், பேரறிஞர் என்றும், கூறிக்கொண்டு தமிழ்நாட்டில் வாளா வலம்வரும் புலைப்புலவர்—தமிழ்நாட்டின் இலக்கிய வளர்ச்சியைக் கொடுக்கவந்த **நச்சுப்பொய்கைகள்** என்று பொதுமக்கள் கருதுதல்வேண்டும்.

"இந்த ஆசிரியர் இப்படிக் கூறுகிறார்; அந்த ஆசிரியர் அப்படிக் கூறுகிறார் என்று வாய்வீச்சு வீசி, அவருள் எவர் கூற்றுப்படியும் நில்லாமல் பொய்மையும், போலியும் கொண்ட இலக்கிய வாணிகர் தம்மை எவரும் போற்றுதல் கூடாது.

தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்குத் தக்கக் கருத்துக்களை இக்கால நிலைக்கும் நடைக்கும் பொருந்தக் கூறும் உண்மைப் புலவர் எந்தப் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கின்றார் என்று கண்டறிந்து அவரைப் போற்றுதல் வேண்டும். தமிழ் மக்களை உலக மக்களோடு ஒப்பவைத்துப் பேசுங்கால் வெறும் பண்டைப் பெருமைகளால் எள்ளளவும் பயனில்லை. திருவள்ளுவர் உயர்ந்தவர்; சிறந்தவர்; அவர் உருவம் இப்படி; அவர் இன்ன இனத்தவர்; அவர் வரலாறு இது; என்று கண்டறிந்தார் போல் பிதற்றிப் பேசுவதைவிட, திருவள்ளுவர் இன்ன கூறுகின்றார்; அவற்றுள் இவை வழியில் யான் நிற்கின்றேன். நீங்களும் நிற்கக் கடவீராக" என்று மொழியும் தமிழ்த்தொண்டரே உண்மை இலக்கியத் தொண்டராம். அக்கருத்துக்களை ஒட்டி எழுதும் ஆசிரியரே உண்மை இலக்கிய ஆசிரியராம். அவர் கூற்றுக்களே வாழ்க்கைக்கு வேண்டுவனவாம்.

இவ்வாறன்றி நாட்டு மக்களுக்கு எவை எவை நாட்டமோ அவையவை யெல்லாம் பற்றிக்கூறி அவர்க்குச் சுவையூட்டி, அவர் எல்லோரையும் வழுக்கிய வழிக்கு இழுத்துக் கொண்டு போகும் தன்மையரும் பொருள் ஈட்டமே தம் இலக்கிய நாட்டம் என்று கருதுவரும் ஆகிய இலக்கிய வாணிகரை மக்கள் கண்டு கொள்ளல் வேண்டும். அவரை எள்ளலும் வேண்டும்.

தமிழரிடம் இதுவரை இல்லாமல் இருப்பது ஒன்று. அது ஒற்றுமை. அது இல்லாமல் தமிழர் பெற்றவை ஒன்று. அது அடிமைத்தன்மை. இந்த அடிமைத்தன்மை அகலாமல் மேலும் இருத்திக்காப்பது ஒன்று. அது அவர் மடிமைத் தன்மை இம்மடிமையால் கெட்டுச் சீரழிவது ஒன்று; அது தமிழர் குடிமைப்பயிற்சி. இக் குடிமைப்பயிற்சி வீழாமல் காக்கச்செய்வது இலக்கியம். அவ்விலக்கியம் பொய்யும், புலையும் நிரம்பிய வெறும் கற்பனைக் கதைகளல்லாமல் வாழ்வியலும் அறிவியலும் மின்னி மிளிர்வனவாய்த் திகழ்தல் வேண்டும். அவ்வாறு அல்லாத போலி இலக்கியங்களையும், அப்போலி இலக்கியங்களைச் செய்யும் வாணிகப் புலவர்தம்மையும் ஒன்றாகக் குழிதோண்டிப் புதைத்தல்வேண்டும்.

தூங்கிய தமிழர் விழித்துள்ளனர். விழித்த தமிழர் தம் காதுகளில் சில தமிழ்ப் பெரியவரின் ஓயாத கூற்றுக்கள் நுழைந்து அவர்க்கு உணர்வை ஊட்டியுள்ளன. அவ்வுணர்வுக்கு நற்றுணையாய் அரசியல் சூழ்நிலைகள் சில தமிழர்க்கு ஊக்கங்காட்டி வருகின்றன. இந்நிலையில் தமிழர் எழுந்து நடக்க வேண்டும். நடந்து முடிப்பவை முடித்துக்கொண்டு, மக்கள் முன்னேற்றத்தில் சேய்மையில் போய்க்கொண்டிருக்கும் வேற்றுநாட்டு மக்களைப் பிடிக்க ஓடவும் வேண்டும்.

பழமைபேசித் துளியும் பயனில்லை. பழமை இலக்கியங்கள் நம் முந்தையோர் சேர்த்த செல்வங்களாக விருக்கட்டும். அதை வைத்துக் குந்தித்தின்னும் சோம்பற் றமிழராக நாம் இருத்தல் கூடாது. நாமும் ஓடியாடிச் செல்வம் ஈட்டுதல் வேண்டும் இலக்கியத்துறையிலும் அவ்வாறே. வாழ்வியலிலும் அப்படியே.

குறுந்தொகைச் செல்வமும், நற்றிணை அமிழ்தும், புறநானூற்றுப் போரும், அகநானூற்று வாழ்வும் வெறும் சொல்லளவில் அமைதல் கூடாது.

நாமும் பண்டையோர் புகழுக்கு இலக்காதல் வேண்டும். அத்தகைய நன்முயற்சிக்கு இலக்கிய வாணிகம் தேவையன்று. இலக்கிய உழவே வேண்டற்பாலது. இலக்கிய உழவே, வாழ்க்கை வேளாண்மையை விளைவிக்கும் ஆற்றலுடையது. இக்கருத்துக்களையே வருங்கால இலக்கிய வேந்தராகிய எந்தமிழ் மாணவர்க்குப் பெரிதும் சொல்ல விரும்புகின்றேம்.

புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்.

(— புறம் 182)

● ● ● ●

மன்னிக்க வேண்டுகின்றேம்

இதழாசிரியர், கடுங்காய்ச்சலால் கடந்த ஏழெட்டு நாட்களாக மருத்துவ மனையில் இருந்தமையால், 1-4-60இல் வரவேண்டிய இதழ் நிறுத்தப்பெற்றது. மன்னிக்க வேண்டுகின்றேம்.

அடுத்த இதழில்

ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின்

கழகமெல்லாம் சூதாடுமிடமா ?

என்ற அரிய சொல்லாய்வுக் கட்டுரை இடம்பெறுகிறது.

ஆம்! அந்த உருவம் வேறு யாருமன்று; சற்று முன்னர் என்னை ஒழுக்கக் கேட்டுச் செயலுக்குக் கூப்பிட்ட நடுத்தரப்பருவ மங்கையே தான்!

இப்போது தயங்காமல் அவளருகில் சென்றேன். சட்டைப் பையில் கிடந்த சில்லறையை எடுத்து அவள் கைகளில் வைத்தேன்.

அவள் வி ய ந் தா ள் ! எதிர்பார்த்தது வேறு! நடந்தது வேறு. நீர்மல்கும் கண்களுடன் வந்தவழியே திரும்பினேன். கையிலிருந்த "பெண்ணின் பெருமை"யை விரித்துப் பார்த்தேன். அங்கு ஒன்றுமே இல்லை. வெறும் வெற்றுத்தாள்! பெருமூச்சு விட்டேன், இப்போது யாரை நொந்து கொள்வது?

மின்மினி

இது வண்டினத்தைச் சார்ந்தது. இதற்கு ஆறு கால்கள் உண்டு. இது ஓர் இடத்தைவிட்டு ஓர் இடத்திற்குப் பெரும்பாலும் நடந்து செல்வதில்லை. பறந்தே செல்கிறது. இப்பூச்சியினத்தில் ஆணுக்கு மட்டுமே சிறகுண்டு. ஆணே பெண்ணை விட அழகாகவும் அமைந்திருக்கின்றது. இறகில்லாமையால் பெண்பூச்சு பறப்பதேயில்லை.

இது புலால் உண்ணும் வகையைச் சார்ந்தது. பெரும்பாலும் நத்தைகளையே விரும்பி உண்ணுகிறது. கதிர்த்தாள்களின் அடியிலும், இலைகளின் பக்கவாட்டிலும் உறங்கிக் கொண்டிருக்கும் ந த் தை யை த் தேடிக்கண்டு கூட்டுக்குள் அன்றி வெளியே காணும் உடலின் ஒரு சிறு பகுதியின்மேல் அமர்கிறது. தன் வாயால் அதன் மெல்லிய உடலை ஐந்தாறு முறை ஒத்துகிறது. இதற்குள் நத்தை உணர்வற்றுப் போகிறது. பின் தன் விருப்பம்போல், அதனுடலைச் சிறிது சிறிதாக கடித்துக் கூழாக்கி உறிஞ்சி வயிறு நிரப்புகிறது.

மின்மினிப்பூச்சு உணவைத் தனித்து அருந்துவதில்லை. ஆணும் பெண்ணுமாகப் பல பூச்சிகள் சுற்றிச் சூழ்ந்து நத்தைபோன்ற உணவின்மீது உமிழ்நீரைக் கக்குகிறது. நத்தையின் உடல் உமிழ்நீரால் கரைகிறது. அந்தப் புலால் கரைந்த நீரை அவை உண்கின்றன. இப்பூச்சிகளின் வால்புறத்திலுள்ள இறுதி இரண்டு வளையங்களில் ம ட் டு மே ஒளிவீசுகின்றது. ஆணைவிட பெண்ணிற்கே ஒளிமிகுதி. இதன்பால் எழும் ஒளியைக் கூட்டவோ குறைக்கவோ அன்றி இல்லாமற் செய்யவோ இது திறமைபெற்றிருக்கிறது. பெண் பூச்சிகள் முட்டைகளை வயிற்றினுள் கொண்டிருக்கும்போதே அம் முட்டைகள் ஒளிவிடுகின்றன, இவற்றின் வாழ்க்கைமுறைகளில் நாம் இதுவரை அறிந்தவற்றைவிட அறியாதவையே மிக அதிகம்.

"தென்மொழி" வளர்ச்சிக்கு

'தமிழ்மொழி தனித்தியங்கும்' என்று பேசுவோரும், 'தமிழ் நாட்டில் வடமொழி தலைகாட்டக்கூடாது' என்று கருதுவாரும் தாம் பேசுங்காலும், எழுதுங்காலும் தனித்தமிழில், பிறமொழித் துணையின்றிப் பேசவும் எழுதவும் செய்கின்றனரா எனின் வெட்கக்கேடே. இக்கோட்பாடுகளுக்காகவே, தமிழரால் நடத்தப்பெறும், தமிழ்த் தாளிகைகளும் அவ்வாறு தனித்தமிழில் நடத்தப்பெறுவனவாகவில்லை. இந்நிலையைத் **'தென்மொழி'** அடியோடு மாற்றியது. தனித்தமிழிலேயே பாட்டுக்கள் இசைக்கவும், உரைநடை எழுதவும், நாடகங்கள் வரையவும் முடியும் என்று கூறிச்செயல்படுத்தியும் வருகின்றது.

'தனித்தமிழில் எழுதினால் மக்கள் எளிதில் புரிந்துகொள்ளார்,' என்று மறுக்கும் அத்தகையோரின் ஆற்றலின்மையைத் **'தென்மொழி'** எடுத்துக்காட்டியது.

தாளிகையுலகிலும், தமிழ் உலகிலும் ஒரு புதுமையை ஏற்படுத்திய பெருமை **தென்மொழி**க்கு உண்டெனில், அதை மறுப்பார் இலர்.

புதுமை விரும்பும் மாணவரும், ஆசிரியரும் இதனைப்போற்றி வரவேற்பதொன்றே நாம் கூறுவதை வலியுறுத்தும்.

தென்மொழியை இருகை நீட்டி வரவேற்பார் தாம் வரைந்துள்ள மடல்களை அவ்வாறே வெளியிடின் நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட ஒரு கருத்து நூலாக அது திகழும்.

இத்தகைய சிறப்பு நலன்களால் மட்டும் ஒரு தாளிகை வளர்ந்துவிடுவதில்லை என்பதை நாம் இதனைத்தொடங்கி நான்கைந்து திங்கட்குப்பின் உணரவேண்டுவதாயிற்று.

இதுவரை வெளிவந்த தென்மொழிக்கு எத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தன என்பதைப் பின்பு அறிவிக்கின்றோம். கடந்தகால நிகழ்ச்சிகளால் நாம் அறிவது இது:—

தென்மொழிக்கு ஒரு தனி அச்சகம் ஏற்பட்டாலொழிய, இது மேலும் சிறப்புற வழியில்லை.

ஆதலின் தென்மொழிக்கு உறுப்பினரா யிருப்போர் ஒவ்வொருவரும் தம்வழியில் ஒவ்வோர் உறுப்பினரைச் சேர்த்துவைத்து இதன் அச்சக வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதன்பால் அன்புகொண்ட தமிழன்பர் தம்மால் இயன்ற பொருளுதவிகளைச் செய்யுமாறு கைகூப்புகின்றோம்.

இதன் வளர்ச்சியில் பங்குகொண்ட விற்பனையாளர் மேலும் பல படிகளை விற்றுத் தென்மொழி வளர உதவுமாறு பணிகின்றோம்.

ஆசிரியராயிருப்போர் தம் மாணவர்க்கும், நண்பர்க்கும் தென்மொழி பற்றிக்கூறி அன்னாரையும் இதனை வாங்கிப் படிக்கச் செய்யுமாறு தலை தாழ்த்துகின்றோம்.

'தென்மொழி' பலராலும் வரவேற்கப்படுகின்றது என்று நாம் கூறுவதைத் தமிழன்பர் மெய்ப்பிப்பர் என்று நம்புகின்றோம்.

தமிழுக்கு உயிர்தரவேண்டாம்; உழைப்பையாவது நல்க வேண்டாமா? உங்கள் முயற்சி வெற்றியளிக்கட்டும்.

அன்பன்

பெருஞ்சித்திரன்.

மறந்தா விட்டீர்?

உள்ளபடி என்மீதில் அத்தான், நீங்கள்
உயர் காதல் கொண்டுள்ளீர் என்றே பேதை
கள்ளமின்றி எண்ணி வந்தேன்; ஆனால், உங்கள்
கருத்தென்ன என்பதின்றே அறிந்தேன்; என்னைப்
பள்ளவயற் கரும்பென்றும் தேனே என்றும்
பலநாட்கள் புகழ்ந்ததனை மறந்தே, இன்பம்
வெள்ளமெனக் காண்பதற்கே என்னை யல்லால்
வேறொருத்தி கைப்பிடிக்கத் துணிந்து விட்டீர்!

கனியென்று சொன்னவிதழ் உமக்கே எட்டிக்
கசப்பாக மாறியதோ! குளிர்ச்சிக் கன்னம்
பனியென்றீர்; இன்றென்ன சூட்டை அஃதில்
பார்த்தீரோ! விழிகொண்டு பார்க்கும் பார்வை
தனியென்றீர்; வட்டமுகம் கதிரைக் கண்ட
தாமரைக்கே ஒப்பென்றீர்; ஆனால், அன்பே
எனையின்று மறந்துவிட்டீர்; அவளை வாழ்வில்
ஏற்பதற்குத் துணிந்தென்னைத் தவிக்க விட்டீர்!

பூங்கொடியே எனச் சொன்னீர்! தமிழின்மேலாம்
புத்தமிழ்தே என்றுரைத்தீர்! இனிக்கப்பேசும்
மாங்குயிலே என்அன்பே என்றீர்! துள்ளும்
மானென்றீர்! மயிலென்றீர்! அவற்றை எண்ணின்
தூங்கவில்லை இரவில் என் கண்கள்; நாளும்
துன்பத்தால் வாடுகின்றேன்! என்னை நீங்கள்
ஏங்கவிட்டே வேறொருத்தி தன்னை வாழ்வில்
எப்படித்தான் மணப்பதற்கு துணிந்துவிட்டீர்?

எனைநீங்கள் மறந்திடலாம்; ஆனால் நீங்கள்
எந்தவகை மறந்தீரோ? இருவர் நாளும்
அணைபோடா இன்பத்தைச் சேர்க்கும் பேச்சில்
அருந்தமிழைக் கண்டோமே அத்தான்! காதல்
சுனை நீரில் உடல் மூழ்கிக் கொம்புத் தேன்போல்
சுவைகண்டோ மேயவற்றை! அத்தான் என்னைப்
பனையளவு மறந்துவிட்டீர்! மாற்றாள் கையைப்
பற்றிவிடத் துணிந்து விட்டீர்! ஆனால் நானோ...!

-[இரா. அரங்கநாதன், நயனூர்மண்டபம்.]-

யாரை நொந்துகொள்வது?

—[மாரி - அறவாழி]—

—()—

நடந்துகொண்டிருந்தேன். கையில் "கலித்தொகையும்,, திரு. வி. க அவர்தம் "பெண்ணின் பெருமையும்" இருந்தன. திரு. வி க வின் பெண்ணின் பெருமையை இதற்குமுன்பே இரு முறை படித்திருக்கிறேன் எனினும், அதன் சுவையை நெஞ்சம் மீண்டும் மீண்டும் நினைவிற் கொணர்ந்து படிக்கச் சொல்லியது. எனவே நூல் நிலையத்திலிருந்து அதனையும் எடுத்து வந்திருந்தேன்.

பகலெல்லாம் உழைத்தோய்ந்த "காலம்" என்ற தாய், அப் போது இருள் என்ற துகிலை அணிந்துகொண்டிருந்தாள்.

மக்கள் நடமாட்டம் மிகுதியாக இல்லாத அந்தச் சாலையின் இருமருங்கும் மங்கலான மின்விளக்குகள் அழுது வடிந்துகொண் டிருந்தன.

இன்றோ நாளையோ மலர்ச்சியுறும் இளம்பெண்ணின் மலர் முகத்தைப்போலக், கீழ்வானத்தின் விளிம்பில், கிளம்பப்போகும் குளிர் திங்களின் ஒளிக்கீற்றுக்கள் ஊசலாடிக்கொண்டிருந்தன.

அந்த அழகைப் பருகிக்கொண்டே நடந்துகொண்டிருந் தேன். அப்போது என் பின்புறமிருந்து "ஐயா" என்று யாரோ மிகவும் மெலிந்தகுரலில் அழைத்ததை உணர்ந்தேன்: திரும்பிப் பார்த்தேன்.

ஒரு நடுத்தர அகவை உள்ள மங்கை நின்றுகொண்டிருந்தாள். "அவள் எதற்காக என்னைக் கூப்பிடவேண்டும்?" என்ற வினு நெஞ்சிலே அலைமோதியது. கேட்டேன்.

"என்னையா அம்மா அழைத்தாய்?"

அவள் மறுமொழி தந்தாள் "ஆமாங்க... உங்களைத்தான்'.

"யார் நீங்கள்?" என்ன வேண்டும்?"

இம்முறை அவள் பதிலளிக்கவில்லை.

நாட்டியமாடுபவளைப்போல உடலை அசைத்தாள். கண் களைச் சுழற்றினுள். கைகளால் தலையைத் தடவிக்கொடுத்தாள். சேலையின் முன்தானையைப் பிரித்து உடலழகைக் காட்டிப் பின், அணிந்தாள்.

அவளது செயல்கள் எனக்கு விளங்கியும் விளங்காமலும் இருந்தன. கண்ணிமைப்பொழுது நேரத்தில் அவளே விளங்க வைத்தாள்.

செயற்கையழகு ஊட்டப்பெற்ற, தன் உதடுகளை அசைத் தாள். "... ஒண்ணும் தெரியாதவரு மாதிரி கேட்கறிங்களே...... எவ்வளவு கொடுத்தாலும் வாங்கிக்கிறேன். ..."

அந்தச் சொற்கள், ஈயத்தைக்காய்ச்சி என் செவிகளில் பாய்ச்சியதுபோலிருந்தன. உடல் கொதித்தது. கைகால்கள் வெடவெடவென்று நடுங்கின. புலிபோல் பாய்ந்து அவள் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட வேண்டும்போலிருந்தது. மிகவும் பொறுமையோடு அடக்கிக்கொண்டேன்.

"சீ... சொறிநாயே!.. யாரென்று நினைத்து என்னை அழைத்தாய்? மானங்கெட்டவளே!.. பரத்தை மகளே! பெண் பேயே! ......"

குரல் நடுங்கியது. சினமிகுதியால் சொற்கள் அடைத்துக் கொண்டன.

என் சினம் கண்டு அவள் நடுங்கி விடவில்லை. மாறாக என்னை வெறுப்போடு உற்றுப் பார்த்தாள். சிறு புன்னகை செய்தாள். "நல்ல ஆம்பிள்ளே... ஐயா...... கையாலாகாதவன்..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

அருகிலிருந்த காவிரியாற்றுப் பாலத்தில் சென்று உட்கார்ந்தேன். மாலைக்காற்று புது வெள்ளத்தின்மேல் படிந்து குளிர்மையோடு இழைந்து பரவியது. கீழ்வானத்தில் குளிர்மதி... அமிழ்த ஒளியைப் பொழியத் தொடங்கியது அருகிலிருந்த பூங்காவில் புற்களின் இனிய ஒலியும், மர அசைவினால் உண்டாகும் சலசலப்பும் எழுந்தன.

அந்த இனிய சூழ்நிலையிலும் என் மனப்புயல் தணியவில்லை. சே! என்ன கேடு கெட்ட பெண் குலம்! ... அச்சம் பயிர்ப்பு நாணம் மடம் என்றெல்லாம் கூறுகின்றனரே! அத்துணைப் பண்புகளையும் உதறித் தள்ளியவர்! .. இவரைத்தானா பெருந்தக்கதெய்வம்" என்று எழுதி வைத்துள்ளனர்? இவரைத்தானா பண்பின் இருப்பிடம் ஆக்கத்தின் உறைவிடம் என்றெல்லாம் பிதற்றிவைத்துள்ளனர்? இவர் வாழும் இந்த நாட்டைத் தானா, தெய்வத் தமிழ் நாடு அப்படி இப்படி என்றெல்லாம் பறைமுழக்கி வருகின்றனர்! எல்லாம் அப்பட்டமான முழுப் பொய்! எவனோ பெண்பித்தேறியவன் பிதற்றிச்சென்ற புளுகு! புனைசுருட்டு! திருட்டுப் பேச்சு!. ! கட்டுக்கதை! . பெண்களாம், தெய்வங்களாம், கற்பாம்!... தூ எவ்வளவு முட்டாள் தனம்...!...

உணர்ச்சிக் கொந்தளிப்பு நிற்கவில்லை. இந்தப் பெண்கள் வாழும் உலகையே பார்க்க விரும்பாமல் கண்களை இறுக மூடிக் கொண்டேன். நெடுநேரம் அப்படியேயிருந்தேன்.

'ஐயோ! அம்மா! அம்மா!... அடிக்காதே... ஐயையோ...!" என்று அருகிலிருந்து திடீரென்று எழுந்த ஓலம் என் அமைதிநிலையைக் கலைத்தது.

அதிர்ச்சியுற்றுக் கண்களைத் திறந்தேன். சுற்றுமுற்றும் பார்த்தேன். எவரும் தென்படவில்லை. எங்கிருந்து ஓலக்குரல் எழுந்தது என்றும் புரியவில்லை. உற்றுக்கேட்டேன்.

நான் உட்கார்ந்திருந்த மரப்பாலத்தின் அடியிலிருந்து தான் ஓலக்குரல் எழுகிறது என்பது தெரிந்தது. ''விடுவிடு என்று எழுந்து படிகளின் வழியாகக் கீழே இறங்கினேன். மணல் வெளியில் நடந்தேன்.

பாலத்தின் கூரை நிழலில் நான்கு உருவங்கள் தெரிந்தன. என் நடை தளர்ந்து, தொலைவிலேயே நின்று நோக்கினேன்.

ஒரு கிழவியின் குரலும், இளம்பெண்ணின் குரலும் மாறி மாறி ஒலித்தன.

' ஏண்டி சொக்கி அந்தப் பச்சை குழந்தைகளைப் போட்டுக் கொல்லுறே?''

பின்னே பாரு ஆயா! சோறு சோறுன்னு பொழுதெல்லாம் உயிரை வாங்குதுங்களே நான் என்ன செய்வேன்?

''பாவம்! குழந்தைகளுக்குப் பசிச்சா அழத்தானே செய் வாங்க..''

"அதுக்கு நான் என்ன பண்ணட்டும்? எந்த அப்பன் சம்பாதிச்சிவந்து கொட்டறான், இவங்களுக்கு ஆக்கியாக்கிப் போட? நேத்து ஒரு எட்டணா கெடச்சுது. அதிலே இதுகளுக்குக் காலையிலே ஆறணுக்குப் புட்டு வாங்கித்தந்துட்டேன். மீதியிருந்த ரண்டணுவிலே, தலைக்குப் பூ எண்ணெய் மொகத்துக்குச் சாயம் எல்லாம் வாங்கிட்டேன். அப்புறம் ஏது காசு?......

...இவ்வளவு செலவு செஞ்சு மேனியை அழகு படுத்திட்டாலும் பயனில்லே,... இந்தஊரிலேஎல்லா ஆம்பிளெயும் ஒரே மாதிரியாவா இருக்கிறானுங்க.,, நான் தான் என்ன செய்வேன்?,.. இந்த 'எழவு களெப் பெத்துட்டு பெரிய தொல்லைப்படறேன்.....''

இரண்டு பெண்களின் பேச்சும் தெளிவாக என் செவிகளில் விழுந்தன. அப்படியே மலைத்து நின்றேன்.

அப்போது அவர் என்னைப் பார்த்திருப்பார் போலிருக்கிறது. ஓர் உருவம் என்னை நோக்கி நெருங்கி வந்தது, "ஏன் அங்கேயே நிக்கறீங்க? வாங்க" என்று சொல்லி என்னை அழைத்தது. நான் அந்த உருவை உற்றுக்கவனித்தேன் .அதிர்ச்சியை அடக்கமுடியவில்லை;

தமிழர் அறிவியல்

கா. சந்தானராசகோபாலன்
(புலவர் இறுதிநிலை அரசர் கல்லூரி, திருவையாறு)

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் நந்தமிழ் அன்றும் இன்றும் இளமைத் தன்மையோடு வாழ்ந்துவருகின்றது. இதன் தொன்மை எண்ணி 'கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்த தமிழ், என்று பலவகையாகப் புகழ்வர் பாவலர். இதன் இளமைத் தன்மை எண்ணி 'உன் சீரிளமைத் திறம் வியந்து வாழ்த்துதுமே' என்று வாயாரப் புகழ்ந்தார் சுந்தரம் பிள்ளை. இதன் இனிமை நினைந்து 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடினார் பாரதியார். தொன்மையும் பெருமையும் இளமையும் இனிமையும் நிறைந்த தண்டமிழ் எண்ணிலா இலக்கண இலக்கியங்களைப் பெற்று வளமையும் பெற்றுளது. இத்தகைய இலக்கண இலக்கியங்களில் தமிழர் தாம்கண்ட அறிவியல் கருத்துக்களை ஆண்டாண்டு குறிப்பாக எடுத்துக்காட்டிச் செல்லுகின்றனர். 'தமிழர் அறிவியல் அறியாதவர்; என்று கூறுவோருக்கு 'இல்லை! இல்லை!! தமிழர் அறிவியல் கண்டவர்; கடைப்பிடித்தவர்' என்று கூறுவது போல அவை அமைந்து கிடக்கின்றன.

நந்தம் செந்தமிழ் மொழியில் தோன்றிய எண்ணிலா இலக்கண நூல்களில் நமக்குக் கிட்டியிருப்பது 'தொல்காப்பியம்' ஒன்றுதான், இந் நூலின்கண் உள்ள மரபியலில் உலகத்துப் பல்லுயிர்களையும் பாகுபடுத்திக் கூறும்வகை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. அறிவியல் கருத்துக்களைச் செம்மையுற செப்புகின்றது அது.

உயிர்;

தொல்காப்பியர் தம் நூலாம் தொல்காப்பியத்தில் உலக உயிர்களை அறுவகையாகப் பிரித்துக் கூறுகின்றார். உடம்பினுன் அறிவதெல்லாம் ஓரறி உயிர், புல், மரம், தாமரை, இன்னபல இவற்றுள் அடங்கும். இவைதம் உடம்பினான் வெப்பம், தட்பம், வன்மை, மென்மை இவை அறிதலான் ஓரறி உயிரென பகுத்துரைக்கப்பட்டன. அடுத்து, சங்கு, நத்தை, அலகு, கொள்ளை, கிளிஞ்சல், இப்பி.ஏரல், இவை ஈரறி உயிராம். இவை உடம்பாலன்றி நாவாலும் உணர்வறிதலின்

அவ்வாறு வகுத்துரைக்கப்பட்டன. நாவால் இவை அறுசுவை யினையும் நெறிப்பட உணர்வன. உடல், நா, இவ்விரண்டோடும், மூக்கால் நறு நாற்றம் தீ நாற்றம் இவற்றை அறிந்துணர்தலான் கரையான், எறும்பு, அட்டை என்னும் இவைபோன்ற உயிர்கள் மூவறி உயிரென மொழியப்பட்டன. இம் மூவகை போலன்றி கண்ணால் கண்டறிவன நாலறி உயிர். அவை நண்டும், வண்டும் ஆம். இவை தம் கண்ணால் வெண்மை, செம்மை பொன்மை, பசுமை, கருமை, பருமை, நெடுமை, நேர்மை குறுமை, கோணம், வட்டம், நாற்கோணம் இன்ன பண்புகளை உணர்ந்து தெளிவன. மேற்கூறிய நான்கோடன்றிச் சிறப்பாகச் செவியால் விலங்கும் பறவையும், பாம்பும், மீனும், முதலையும், ஆமையும் ஓசை வேறுபாட்டை உணர்தலின் ஐயறி உயிர் என மொழியப்பட்டன. ஆறறி உயிராவது அவற்றோடு மனத்தையும் உடையது. மக்கள் தம்முடைய மனத்தினால் நல்லன இவை; அல்லன இவை; நல்லனவற்றைச் செய்தல்வேண்டும் அல்லனவற்றைத் தள்ளல்வேண்டும் எனப் பகுத்தறிந்து செய்யும் தன்மையர். இப்பொருள் இத்தன்மையது என கருதும் இயல்பினர். இவைபோல்வன வேண்டும் என விரும்பும் கருத்தினர். ஆகவேதான் மாந்தர் ஆறறி உயிர் எனப்பட்டனர்.

'மக்கள் தாமே ஆறறி உயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'

— என்பது தொல்காப்பியம்.

'குரங்கிலிருந்து பிறந்தவர் மக்கள்! என்று ஆய்ந்துணர்ந்த மேனாட்டு அறிவினர் கூறுகின்றனர். ஆனால் தொல்காப்பியர் 'பிறவுமுளவே அக்கிளைப் பிறப்பே' என்று நூற்பா செய்துள்ளார். இவ்வரிக்கு உரை கூறிய உரையாசிரியர், மக்கள் தாம் ஆறறி உயிர்; குரங்கு, யானை முதலியன உணர்வுடையனவாயின் அவையும் ஆறறி உயிருள் அடங்கும் என்ற கருத்துப்பட உரை கூறினர். இவற்றான் தமிழர் மேனாட்டு ஆய்வாளரின் கருத்தைத் தன்னுள்ளும் முன்பே கொண்டிருந்தனர் என்பது விளங்குகின்றதல்லவா!

தொல்காப்பியம் 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என அறிஞர் பலர் கூறுகின்றனர். இத்தகைய முற்பட்ட காலத்திலே வேறுயார் இத்தகைய அறிவியற் பாகுபாட்டை — கருத்தினை — உலகுக்குணர்த்தினர்?

எலும்பு உள்ள உயிரிகள் இவை - இல்லாத உயிரிகள் இவை என்று அறிவியல் நூலிலே பள்ளிமாணவர்

பயிலுகின்றனர். திருவள்ளுவர் கி. மு. இரண்டாம் நூற்ருண்டிற்கு முற்பட்டவர். அவர்தம் குறளின் ஒரு பாவில் என்பில்லாததைக் குறித்துச் செல்கின்ருர். அதோடு மட்டுமன்று, அதை வெறுப்பின்றி எங்கும் ஒருமைத்தன்மைத்தாகிய வெயின் முன் தன்னியல்பாற் செல்லின் இறந்துபடும்' என்ற கருத்தினையும் கூறுகிருர்.

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம் — என்பதே அக்குறள்.

நிலைத்திணை (தாவரம்);

செடி கொடிகட்கும் உயிருண்டு என்பதனைச் 'சகதீச சந்திரபோசு கண்டுபிடித்தார் என்றுரைப்பர்; அவரறியாதார்; அவருக்கு முன்பே 'நிலைத்திணைக்கும் உயிருண்டு' என்பதனைத் தமிழர் கண்டுபிடித்துத் தம்மிலக்கியங்களில் அதனைப் பொறித்து வைத்துச் சென்றுள்ளனர் என்பதனைக் கண்டு தெளியாதார் அவர்!

"எழுபிறப்பும் தீயவை தீண்டாப் பழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்'

என்பது குறள். இக் குறளுக்கு உரைதந்த பரிமேலழகர் எழு பிறப்பும் என்ற இடத்திற்கு ஏழு பிறப்பையும் சுட்டிச் சொல்லுகின்ருர்.

"ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானிடம்
நீர் பறவை நாற்கால் ஓர்பப்பத்துச்—சீரிய
பந்தம் ஆம் தேவர்பதிணு லயன் படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து'

இந்த எழுபிறப்பில் நிலைத்திணையும் ஒன்ருகும். இதனைன் தமிழர் பண்டே நிலைத்திணைக்கு உயிருண்டு என்பதனை அறிந்து தெளிந்து கூறியிருக்கின்றனர் என்பது தெரிகின்றது அல்லவா?

செடி, கொடி, மரங்கள் நிலத்தில் முளைத்தெழ வேண்டுமாளுல் அவற்றிற்கு மண்வளம், காற்று, ஞாயிற்ருெளி இவை வேண்டும் இவற்றைவிட நீர் முதன்மையானது என்றெல்லாம் இன்று அறிவியல் நூல்களினுல் மாணவர்க்கு அறிவு கற்பிக்கப் படுகிறது. இதனை அன்றே திருவள்ளுவர் அழகாகத் தம் குறளில் கூறிச்சென்றுள்ளார்.

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்ருங்கே
பசும்புல் தலைகாண் பரிது'

என்பதே அக்குறள்.

மழை:

கடல்நீர் கதிரவனின் வெப்பக் கொடுமையால் கொதித்து ஆவியாகிறது. அவ்வாவி மேற்சென்று மலையுச்சியில் இடி படும்போது மழைபெய்கிறது என்று கூறுவதோடன்றிச்செயல் முறைகள் பலவும் காட்டப்படுகின்றன. ஆனால் இதனைக் கற்கும் மாணவர் இதனையும் மேற்கூறிய கருத்துக்களையும், இனிக் கூறப்போவனவற்றையும் வேற்று நாட்டான் - ஆங்கிலேயன் தான் கண்டுபிடித்தான் என்று தன்னுள் எண்ணிக் கொள்ளுகின்றனர். 'இதனையெல்லாம் கண்டுபிடித்து, தமிழன் அதனினும் சிறப்பாகத் தன்நூலுள் கூறியுள்ளான். இதனை நீ அறிக' என்று எந்த ஆசிரியரும் அவர்க்குக் கற்றுக் கொடுத்த தில்லை. இனியாவது சொல்லவாவது செய்வாராக!

மழையானது அதன்கட் பெய்யாது விடுமாயின் அளவில்லாத கடலும் தன்னியல்பு குன்றும் என்று அவ்வறிவியல் நூலினும் அழகுபட வள்ளுவர் கூறிச்சென்றுள்ளார்.

'நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான் நல் காது ஆகிவிடின்'

இதனுள் (நெடுங்கடல் என்பது இலக்கிய இன்பந்தரும் சொல்.)

மருந்து:

மக்கள் எல்லோரும் நலங்குன்றி நோயடைகின்றனர். இதனை நம் பண்டைமக்கள் வெறுத்தனர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனச் செப்பினர். ஆகவே நோய் வராதிருக்க வழி வகைகள் பல சொல்லினர். நோய்க்கு மருந்து சொல்வதை விட நோய் வராமல் செய்துவிட்டால் மருந்துக்கு வேலையில்லையல்லவா? இதனை எண்ணியே வள்ளுவரும் தனது வையம்புகழும் பொதுமறையில் மருந்தென்னும் அதிகாரம் வகுத்தார். அவ் அதிகாரத்தில் மருந்தின் வகைகளையும் அதனைக் கையாளும் முறைமையினையும் மொழியவில்லை. மேற்கூறிய நெறி முறையினையே அவரும் பின்பற்றினர்.

'உணவும் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த அளவின்றி அதனின் மிகுமாயினும், குறையுமாயினும் மருத்து நூற் பயிற்சியுடையோரால் வளி முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் துன்பஞ் செய்யும்' என்று அவர் கூறுகின்றார்;

'மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று' —(குறள். 941)

இதற்கு உரைகண்ட பரிமேலழகர் 'நூலோரெண்ணிய' எனவே அவர் அவற்றான் வகுத்த வாதப்பகுதி, பித்தப்பகுதி. ஐப்பகுதி என்னும் பகுதிப்பாடும் பெற்றாம். அவற்றிற்கு, உணவு ஒத்தலாவது அவை வீரியங்களானும் அளவானும் பொருந்துதல். செயல்களொத்தலாவது மனமொழி மெய்கள ளாற் செய்யுந் தொழில்களை அவை வருந்துவதற்கு முன்னே யொழிதல். இவை இரண்டும் இங்ஙனமின்றி மிகுதல் குறைதல் செய்யின் அவை தத்தம் நிலையின் நில்லாவாய் வருந்துமென்ப தாம்' என்று கூறுகின்றார். 'உணவை அதிகம் உட்கொள் ளாதே, குறைத்து உட்கொள்' என்று இன்றுள்ள மருத்துவர் கூறுகின்றனர். ஆனால் உணவைக் குறைத்தாலும் நோய் வரும் என்று கூறியவர் வள்ளுவர் ஒருவரே. அவர் தான் கூறு வதாகச் சொல்லாமல் 'நூலோர் சொல்லிய நோய் மூன்றும் துன்பஞ் செய்யும்' என்று கூறுகின்றார். இதனால் அவர் காலத் துக்கு முன்பே மருத்துவநூல்வல்லார் இருந்துள்ளனர் என்றும், அவர் மேற்கூறியவாறு நோயை மூன்றுவகையாகப் பிரித்திருந் தனர் என்றும் அறிய முடிகின்றது. அவர் மருத்துவத்தைப் பற்றி நூல்பல யாத்திருக்கவேண்டும். இதனை, நாம் 'நூலோர்' என்று வள்ளுவர் கூறுவதனாலே அறுதியிட்டு உறுதியாகக் கூற முடிகிறது. அவை கிட்டாமற்போனது நமது போகூழ்தான். உணவு உண்ணும்போது முன் உண்ட உணவு அற்றது அறிந்து உண்ணவேண்டும்; அளவறிந்து உண்ணவேண்டும். மாறுபா டில்லாத உணவை மறுக்கும் அளவுக்கு உண்ணவேண்டும்; இவ்வாறெல்லாம் உண்டால் அவனது உயிர்க்கு எவ்வகைத் தீங்குமில்லை.

இன்று நாட்டில் நிலவும் மருத்துவர் நோயாளிகளை நன் முறையில் பார்ப்பதில்லை. அவர்தம்மிடம் இன்முகம் கொடுத் துப் பேசி நோய்க்குத்தக்க மருந்து கொடுத்து அதனைத் தணிப்ப தில்லை. வள்ளுவர், எவ்வாறு மருத்துவன் நோயாளியைக் கண் காணிக்க வேண்டுமென்று கூறுகின்றார் கேளுங்கள்

'நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்-நாடி வாய்ப்பச் செயல்'

மருத்துவன் நோயாளியின்மாட்டு நிகழ்கின்ற நோயை அதன் குறிகளான் இன்னதென்று துணியவேண்டும். பின் அது வரு தற் காரணத்தை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். அதனைச் செய்யும் வழி பிழையாமற் செய்தல் வேண்டும்.

குருதி எடுத்தலும் அறுவை செய்தலும் மேனாட்டார் கண்ட — நமக்குக் கற்றுக்கொடுத்த — வியத்தகு முறை என்று எல்லோரும் வாயார வியக்கின்றனர். அம்முறை பண்டே தமிழகத்திருந்தமை அவரறியார்போலும். அது நமக்குப்புதிதன்று! இதோ அதனையெல்லாம் நாடித்தானே வள்ளுவர் 'அது தணிக்கும் வாய் நாடி' என்றார். இதற்கு உரைதந்த பரிமேலழகர்கூட 'மருந்து செய்தல், உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல் களெல்லாம் அடங்குதற்கு 'அது தணிக்கும் வாயென்றார்' என்று உரை கூறினார்.

பதினெண்சித்தர் தமிழ்மண்ணில் வாழ்ந்திருக்கின்றனர். 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாய் மொழிக்கு இலக்காயமைந்தவர் அல்லரா அப்பெரியவர்எல்லோரும் தம் பெயராலேயே அவர் மருத்துவம் கண்டு எழுதிவந்தனர். இன்றும் நாட்டில் 'சித்த மருத்துவம்' நாமறிவோம். அவர்,

'பாம்பு கடித்தால் வாழைப்பட்டைச் சாற்றைக்குடி'
'பூரான் கடித்தால் பனை வெல்லத்தைச் சாப்பிடு'
'நகிற் குத்தலுக்கு மல்லிகைப்பூவை வைத்துக் கட்டு'
நாய் கடித்தால் நாயுருவி வேரை மென்று சாற்றைக் குடி'

என்றிவ்வாறு நோய்க்குப் பலமருந்துகளைக்கூறிச்சென்றார். ஆனால் தமிழ் மக்கள் அவர்கூறிய இம்முறையினைப் பின்பற்றுவது இல்லை. மருத்துவ விடுதிக்குச் சென்று, பொருள்பல செலவழித்து, நாட் பலவாக நோயில் உழன்று அதன்பயனாய் வலிவிழந்து பின் ஓரளவு நலம்பெறுகின்றனரே ஒழிய, எளிதில், மலிவில், விரைவில் நோய் நீக்கி நல்வாழ்வுதரும் இந்தச் சித்த மருத்துவத்தைப் பின்பற் றாதிருப்பது வருந்துதற்கு உரியது.

விண்:

விண்நூல் அறிஞர் பண்டு தமிழகத்தில் இருந்தனர். அவர் 'கணியர்' என்றும் 'அறிவர்' என்றும் அழைக்கப்பட்டனர். அவர் 'குற்றமற்றவர் செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் பகலும் இரவும் இடைவிடாது வானைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும், மின்னும், கோளும், புகையும் மின்வீழ்வும், கோள்நிலையும், மழைநிலையும், பிறவும் பார்த்துப் பயன் கூறினர். இது இளம்பூரணர் உரை. அவர் 'மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும், என்னும் தொல்காப்பியஅடிக்கே மேற்கண்டவாறு உரைகூறினார்.

'பணியும் வெயிலும் கூதிரும் யாவும்
துணியில் கொள்கையோடு நோன்மை எய்திய
தணிவுற்ற றிந்த கணிவன்முல்லை' — என்னும்

இப்பன்னிரு படல நூற்பாவாலும் மேற்கருத்து வலியுறுவது காண்க. இந்நூலின் வழிநூலாகிய புறப்பொருள் வெண்பாமாலையும் 'திரிவின்றி விண்ணிவ் வுலகம் விளக்கும் விளைவெல்லாம் – கண்ணி யுரைப்பான் கணி' என்று கூறுகின்றது.

இவற்றால் பண்டு நம் தமிழகத்து விண் நூல் அறிஞர் வாழ்ந்திருந்தனர் என்பதனை நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூற ஒல்லும். அஃதோடன்றி அவர் விண்ணைப்பற்றி ஆய்ந்துள்ளனர் என்பதையும் திண்ணமாகக் கூறமுடியும். இல்லாததை இலக்கணம் கூறுதல்லவா! இதோ! அதற்குச் சான்றும் நமக்குக் கிடைக்கின்றது. திங்களைப்பற்றி முயன்று ஆய்கின்றனரே ஒழிய கதிரவனை ஆராய முற்படவில்லை. இன்றுதான் உருசிய நாட்டார் 'திங்களில் குடியேற்றம் நடந்தபின் நாங்கள் கதிரவனை ஆராய முற்படுவோம்' என்று கூறுகின்றனர். ஆனால் பண்டே நம் நாட்டார், கதிரவனை ஆராய்ந்து அதுபற்றிய அழகிய கருத்துக்களைக் கூறியுள்ளனர். புறநானூற்றிலே உறையூர் முதுக்கண்ணன் சாத்தனார் இதனைக் கூறுகின்றார்.

'செஞ்ஞாயிற்று வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்படும் பார்வட்டமும், காற்றியங்கும் திக்கும், ஓர் ஆதாரமுமின்றித் தானே நிற்கின்ற ஆகாயமும் என்று சொல்லப்பட்ட இவற்றை ஆண்டாண்டுப் போய் அளந்தறிந்தவர்களைப் போல நாளும் இத்துணையளவை உடையனவென்று சொல்லும் கல்வியை உடையோரும் உளர்' என்பதே, அது.

சேரமான் யானைக்கட் மாந்தரஞ் சேரல் இரும்பொறை இறந்தவிடத்து கூடலூர்க் கிழார் பாடிய பாட்டு புறப்பாட்டில் இடம் பெற்றுள்ளது. அதனாலும் நாம் ஒரு சிறந்த அறிவியற் கருத்தை அறிய முடிகின்றது.

"மேடவிராசி பொருந்திய கார்த்திகை நாளின் முதற்காலின் கண் இருளையுடைய பாதியிரவின்கண் முடப்பனைபோலும் வடிவையுடைய அனுடநாளின் அடியின் வெள்ளி முதலாக்கயமாகிய குளவடிவுபோலும் வடிவையுடைய புனர்பூசத்துக் கடையின் வெள்ளி எல்லையாக விளங்கப் பங்குனி மாதத்தினது முதற் பதினைந்தின்கண் உச்சமாகிய உத்தரம் அவ்வுச்சியினின்றும் சாய, அதற்கு எட்டாம்மீனாகிய மூலம் அதற்கெதிரே எழாநிற்க, அந்த உத்தரத்திற்கு முன் சொல்லப்பட்ட எட்டாம் மீனாகிய மிருகசீரிடமாகிய வீண்மீன் துறையிடத்தே தாழக் கீழ்த்திசையிற் போகாது வடதிசையிற் போகாது கடலாற் சூழப்பட்ட பூமிக்கு விளக்காகிய முழங்காநின்ற தீப்பரக்கக் காற்றாற் பிதிர்ந்து கிளர்ந்து ஒரு மீன் வானத்தினின்றும் விழுந்தது. அதனைப்பார்த்து யாமும் பிறரும் பல்வேறு வகைப்பட்ட இரவலர், எம்முடைய பறை

யொலிபோலும் ஒலியையுடைய அருவியையுடைய நல்லமலை நாட்டுக்கு வேந்தனாகியவன் நோயையுடையனல்லனாகப் பெறின் அழகிதென இரங்கிய நெஞ்சத்துடனே மடிந்த உள்ளம் பரப்ப யாம் அஞ்சினேம். அஞ்சினபடியே ஏழாம் நாள் வந்ததாகலின் இன்று ....(அவன்) வானுலகை யடைந்தான் இது கூடலூர்க்கிழார் பாடிய பாட்டின் கருத்து. இதனால் அப்புலவர் மீன் நிலையும் விண்நிலையும் அறிந்திருந்தார் என்பதனைத்தெற்றென அறிய முடிகின்றது.

திருவள்ளுவர் காணும் திருமகன் ஒருவன் இரவுக் குறிக்கண் மதியைக்கண்டு 'வானத்து மீன்கள் வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையும், எம் மடந்தை முகத்தையும் இதுமதி, இதுமுகம் என்றறியமாட்டாது தங்நிலையினின்றும் கலங்கித்திரியா நின்றன' என்று கூறுகிறார்.

'மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்' (குறள்)

'பதியிற் கலங்கிய' என்ற சொற்குப் பரிமேலழகர் ஓரிடத்து நில்லாது எப்பொழுதும் இயங்குதல் பற்றிப் 'பதியிற் கலங்கிய என்றார்' என்று உரை கூறினார். இதனால் விண்மீன் இயங்கும் தன்மைத்து என்பது விளங்குகின்றது.

இங்குக் கூறிய இவற்றால் தமிழர் காணாத ஒன்றில்லை என்பதையும் அவர் எல்லாவற்றையும் கண்டவர் - கடைப்பிடித்தவர் என்பனவற்றையும் அறிய முடிகின்றது. உயிர்கள், நிலத்திணை இன்னவற்றையெல்லாம் ஆய்ந்துரைத்துள்ளனர். மழை தோன்றுவதெப்படி? நோய் தோன்றுவது எவ்வாறு? அதனைத் தடுத்து நிறுத்தல் யாங்ஙனம்? என்பனபோன்றவற்றை யெல்லாம் அவர் ஆராய்ந்து முடிபு கூறியுள்ளனர். விண்ணைப்பற்றி அவர் செய்துள்ள ஆராய்ச்சி வியக்கற்பாலதாயுள்ளது. அணுவை அறிந்திருந்தனர். இவ்வாறெல்லாம் அறிவியலில் ஆற்றலொடு வாழ்ந்த தமிழர் தன்பின்னையோர் பயன்பெறும்வண்ணம் அம்முறைகளை எல்லோர்க்கும் செய்துகாட்டினர் இலர். ஒரு சிலராலே மட்டும்தான் அது அறியப்பட்டிருந்தது. அந்த ஒருசிலரில் புலவரும் அடங்கியவர்தானே! அவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் போன்றோர் ஆவர். அவர், தாம் அறிந்து தெளிந்த அறிவியற் செய்திகளை விளக்கமாக விளம்பினர் இலர். தாமறிந்த அறிவியற் செய்திகளைக் குறிப்பாக நாம் உணரும் வண்ணம் குறித்து வைத்துள்ளனர். அந்த ஒரு சிலவும் மிகச் சிறந்தவையாக இருத்தலை நாம் முன்பே கண்டோம். இதிலிருந்து, இன்று கண்ட – காணாத அறிவியற் கருத்துக்களையும் தமிழர் கண்டுள்ளனர் என்பதை அறிக.

❋ ❋ ❋

ஈத்துவக்கும் இன்பம்

கற்பவைதாம் இவைஎனவே
கண்டெடுத்துப் போற்றிக்
கற்றபொழு(து) ஏதறிந்தேன்?
ஒன்றுமில்லை — இல்லை!
கற்றதனைப் பிறர்க்கெடுத்துச்
சொல்லுகின்ற போதில்
கற்றனவும் பாச்சுவையும்
கண்டுணர்ந்தே னம்மா!

ஈட்டுகின்ற போதிலதன்
இன்னலுணர்ந் தேன்: அங்(கு)
இன்பமெனச் சிலபலநான்
கண்டுணர்ந்த தில்லை;
ஈட்டியதை ஏற்றவருக்(கு)
எடுத்தளிக்கும் போதில்
என்செல்வத் திறமுணர்ந்தேன்;
இன்பநிறை வுற்றேன்!

நாடிடுவேன், தேடிடுவேன்,
நாளிரவும் இன்றி!
நயந்தடுக்கி வைத்திடுவேன்,
உள்ளத்தில்;—வீட்டில்!
கூடிடுவேன் வேண்டியவர்
தம்முடனே; கூடிக்
கொடுத்திடுவேன், பகிர்ந்திடுவேன்,-
இன்பமதும் அங்கே!

-[சாலை இளந்திரையன்]-

முன்னிதழ்த் தொடர்ச்சி

2. கூதிர்

காலம்: ஐப்பசி - கார்த்திகை

பாட்டின் பெயர்: காதுப்பறை குளிரும்
கூதிர்ப் பற்பறை

பாட்டுச் சுருக்கம்:

ஆரிடி முழக்கிய கார்காலம் அடங்கியது. அது தேய்ந்து ஓய்ந்து போகுமுன் தன் வலிவெல்லாங் காட்டினாற்போல, ஐப்பசி மாதத் தொடக்கத்தே அடைமழை வலுத்துப் படுபசி யடக்கிய மேலோன் கைபோல் ஒடுங்கிப்போனது. முன் மாதங்களில் கருமை பூண்டிருந்த வானம் வெளிர்கின்றது. ஆர்த்து முழக்கிய இடியும் அடங்குகின்றது. மின்னல் அயர்ந்தது. வானவில்லைப் பார்க்க இயல்வதில்லை, குளிர்காற்றால் நிரம்பிய வானம் முழுதும், செங்கோன்மை குன்றிப்போன அரசன் ஒருவனின் ஆட்சிக்குட்பட்ட நிலம்போல் அழகு குன்றிக்கிடக்கின்றது. கருமுகில்கள் காணப்படுவதில்லை, தெள்ளிய நீர்த்தேக்கத்தே உலவுகின்ற அன்னக் கூட்டங்களைப்போல நீரற்ற வெள்ளிய முகிற் கூட்டங்கள் மட்டுமே வானில் உலவுகின்றன. வானில் பறந்து திரிந்த குருகுகள் வான்விட்டு இறங்குகின்றன. எழுந்து விரியாத மென்மையான தோகையை ஏந்தித் திரியும் மயிற்சேவல்களை, பெண்மயில்கள் நெருங்க விடுவதில்லை. நாரைகள் உயரப்பரவாத நிலையில் தந்தம் பிணையொடு பொழில்களில் உலவுகின்றன.

துரை-மாணிக்கம்

நிலைகளில் நீர் தெளிந்திருக்கின்றது: ஆற்றுநீர் கரைமீறி ஓடு கின்றது. கரைகளில் பெண் நண்டுகளோடு ஆண் நண்டுகள் மேய்கின்றன. நீண்ட கண்களை உடைய நத்தைகள் இலைகளைப் பற்றி நகர்ந்துசெல்கின்றன. சிறு சங்கும், இப்பியும் நீரோடு வருகின்றன. சிறுசிறு மீன்கள் பெருகுகின்றன. அவை தந்தம் இனத்தோடு கழிவாய்களில் குதிக்கின்றன.

வயல்களில் வாளை மீன்கள் புரள்கின்றன, அங்குள்ள பயிர் நெற்றுக்கள் முதிர்ந்து தலைசாய்ந்து கிடக்கின்றன. வீசு கின்ற கூதிர்க்காற்றுக்குப் பொறுக்காமல் அன்னங்கள் காமுறு கின்றன. நீண்ட அலகுகளால் ஓசைகளை எழுப்பியவாறு அவ் வன்னங்கள் ஓயாமற் புணர்ந்து மகிழ்கின்றன.

கரையோரங்களில் புற்கள் அடர்ந்து விளங்குகின்றன, பொய்கைப் புனலின் ஆம்பல் மலர்கள் விரிந்து அழகு செய்கின் றன. தாமரை மண்டிய பசிய இலைப்பரப்புக்களில் பனிநீர்த் திவலைகள் தூங்குகின்றன. அடர்த்த வேலியிடத்தே இருண்ட கால்களையுடைய நொச்சிச் செடிகள் பூத்து மணம் பரப்புகின் றன; புதரெங்கும் நாணற்செடி மலிந்து பூக்களோடு விளங்கு கின்றது. அழகிய பொன்போன்ற தாதுக்களை அடிநிலத்தே பரப் பியவாறு செம்பஞ்சு மலர்கள் தோற்றமளிக்கின்றன. அவற் றிடையே வண்டுகள் மொய்க்கின்றன. கார்காலத்தே பூத்து மலர்களோடு விளங்கிநின்ற அழகிய கொன்றைமரங்கள் அம் மலர்களை ஊழ்த்திநின்று, இனிய பனித் துளிக்குத் தம் இலைக் கைகளை நீட்டியவாறு, பொன்போன்ற தளிர்களோடு விளங்கு கின்றன, முல்லைக்கொடியிலும், மருதமரத்திலும் முற்காலத்தே பூத்த மலர்கள் ஒழிகின்றன. பாலைமரம் பல மலர்களோடு நிற் கின்றன. முள் மேனியும், முறுக்கிய உடலும் பூண்டு, தூக்கி நின்ற உருவையுடைய கள்ளிச் செடிகள் மலர்ந்து காட்டை அழகுசெய்கின்றன.

சோலையில் உள்ள பறவைகள் நீர்ச்சுனைகளை விட்டு நீங்கிக் காலை வெயிலிற் தந்தம் சிறகுகளை உலர்த்துகின்றன. துள்ளு கின்ற கால்களை அடக்கியவாறு மான் இனம் தம் அடிவயிறுகளை வெயிலிற்காட்டி அயர்கின்றன. யானைக்கூட்டங்கள் பெருத்த குரல் எழுப்பி ஆர்த்து எதிரேறிவரும் இளஞாயிற்று இன்னொளி குளிக்கின்றன. அடிக்கின்ற ஊதைக்காற்றால் உடல் மிகவருந் திப், பேதைக் குறுமுயல்கள் வருந்திக் கிடக்கின்றன.

ஐப்பசி தொடக்கத் தடைமழை வலுத்து
மெய்ப்பசி யடக்கிய மேலோன் போல
கார்நகர்ந் தொடுங்க, கருவான் வெளிர,
ஆரிடி அடங்கி அயர்ந்திட மின்னல்;

வான்வில் மேவா வளிவான் முழுதும்
கோன்மை குன்றிய கோநிலம் போலக்
களையிழந் திருப்பக், கருமுகில் வெளிர்ந்து
தெளிநீர் ஓடைத் திரிதரு மன்னக்
குழாமென் றுலவ, குருகுவான் நீங்க
எழாமென் பீலி ஏந்து மயிற் சேவற்
கிணைபெடை புலப்ப எழுந்துயர் பறவாப்
பிணையொடு நாரைக் குழாம்பொழி லுலவ
நிலைநீர் தெளிய, நெடும்புன லாற்றி
னலைகரை மீற, அலவற் பெடையொடு
நிலந்தலை மேய, நெடுங்கண் நத்தை
இலையிவர்ந் தலைய, இப்பியுஞ் சங்கும்
புனலொடு மிதப்ப, பொடிமீன் பெருகி,
இனத்தொடு கழிவாய் யாங்கணும் குதிப்ப,
வாளை புரளும் வயல்தொறும், முதிர்ந்த
சூலிக் கதிரொடு பயிர்தலை சாய,
கூதிர்க் காற்று குறுங்கால் அன்னம்
காதன் மேம்படக் காமப் பெடையோ
டோயா நீள்வாய் ஓங்கிசை அரற்றி
மாயாப் புணர்ச்சி மகிழ்ந்திடப், பொய்கை
ஆம்பல் விரிதந் தணியொடு விளங்கப்
பூம்புனல் மருங்கிற் புல்லடர்ந் தோங்க,
முட்கொடித் தாமரை மூசிலைப் பரப்பில்
முத்துச் சிறுபனி மொய்துளி தூங்க,
இலையொடு மணக்கும் இருங்கால் நொச்சி
அலைமண மலரோ டரசேய்ந் திருக்க,
பூணுநல் மலரொடு புதர்மிசை யெங்கும்
நாணல் மலிந்து நனிநடம் பயில,
அம்பொன் சுண்ணம் அடிநிலம் பரப்பிச்
செம்பஞ் சின்மலர் செறிவண் டிமிர,
கார் கை தடவக் கடிமலர் தூங்கிய
ஆர்பூங் கொன்றை அம்மலர் ஊழ்த்தி
இன்றுளிப் பனியினுக் கிலைக்கை நீட்டிப்

பொன்றளிர் போர்த்துப் பொலிவொடு நிற்ப,
முல்லை, மருதம் முன்மலர் ஒழியப்
பன்மலர் அடுக்கிப் பாலை விளங்க,
முள்ளின் மேனி, முறுக்குடல் தூக்கிய
கள்ளி மலர்ந்து காடணி செய்ய,
சோலைப் புட்கள் சுனைவாய் நீங்கிக்
காலை வெயிலிற் கடிசிற குலர்த்த,
துடிகால் அடக்கித் தோன்றிள வெயிற்கே
அடிவயிறு காட்டி மானினம் அயர,
கரிக்குழா மலைகுரல் காட்டிக் கான்வயின்
எரியிள ஞாயிற் றின்னொளி முழுக்க,
ஊதைக் காற்றுக் குடல்மிக வருந்தி
பேதைக் குறுமுயல் பேதுற் றுயிர்க்க.

(தொடரும்)

உப்பு மருத்துவம்

- இது உடல் உரத்தை வளர்க்கும்.
- நெய்யில் உப்பிட்டுக் காய்ச்சி உண்டுவந்தால் சூலை நோய் விலகும்.
- ஒருகை உப்பைக் குளிர்ந்தநீரில் கரைத்துக்குடித்தால் குருதிக் கக்கல் உடனே நிற்கும்.
- உப்புக் கலந்த நீரை மூக்கால் உறிஞ்ச இன்புளுயன்சா காய்ச்சல் நிற்கும்.
- வயிற்று வீக்கத்தை உப்புநீர் குறைக்கும்.
- உப்புக்கரைத்த நீரில் குளிக்க உடல் நரம்புவலி இவை விலகும்
- அளவுக்கு மீறிய உப்பு உடலில் சேர ஆண்மைக்குறைவு ஏற்படும்.
- மோரில் உப்புக்கலந்து உண்டால் செரியாமை, புளியேப்பம், வயிற்றுளைவு உடனே நீங்கும்.
- எண்ணெயில் உப்பைக்கலந்து சூடுகாட்டி, வீக்கம் அடிபட்ட காயங்களுக்கு ஒத்தடம் கொடுக்க வலி அறவே குறையும்.
- வெயிலின் சூட்டால் மயங்கி விழுந்தவர்க்கு உப்புநீர் கொடுக்க, மயக்கம் தெளியும்.

தமிழாசிரியர் நிலை

1960—1961 சென்னை மாநில அரசினர் வரவு—செலவுத் திட்டத்தைப்பற்றி மேல் சட்ட மன்றத்தில் பண்டாரகர் அ. சிதம்பரநாதனார் பேசியபோது அடியிற்காணுமாறு குறிப் பிட்டார்.

"உயர்நிலைத் தொடக்கப்பள்ளி 6, 7 வகுப்புகட்கும், உயர் நிலைப்பள்ளி முதல்படிவம் முதல் மூன்றும்படிவம் வரையுள்ள வகுப்புகட்கும், தமிழ் கற்பிப்பதற்குப் புலவர் அல்லது வித்து வான்பட்டம் பெற்றவர் நியமிக்கப்பட வேண்டுமென்று சென்ற டிசம்பர்மாதத்தில் தீர்மானம் வந்தபோது, இதற்குத் தீர்மானம் வேண்டாம் என்றும், நடுநிலைப்பள்ளிகளில் 1, 2, 3 படிவங்களில் பள்ளி இறுதிநிலை (Secondary Grade) ஆசிரியர் சொல்லிக்கொடுப் பது கிடையாது என்றும், தமிழ் ஆசிரியரே தாம் சொல்லிக் கொடுக்கின்றனர் என்றும் கல்வி அமைச்சர் கூறினார். இதற்கு மாறாக இன்றும் திருநெல்வேலி மாவட்டம், தஞ்சைமாவட்டம் போன்ற மாவட்டங்களில் 1, 2. 3 படிவ வகுப்புக்களுக்குத் தமிழ் ஆதிரியர்தாம் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்படவில்லை என்பதைக் கல்வி அமைச்சருக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1958 நவம்பரில் நான் கேட்ட வின விற்குப் பதிலிறுக்கும்பொழுது கல்விஅமைச்சர் தமிழாசிரியர்க்கு உள்ள இரண்டாவது படிநிலை 45-2-85 அல்லது 45-3-60-2-90 என்று குறிப்பிட்டார். ஆனால், இராமநாதபுர மாவட்டத் திலும் மதுரை மாவட்டத்திலும் 40-1-80 என்ற படிநிலையும், 40-1½-60 என்ற படிநிலையும் ஏன் செயலில் இருக்கின்றன என் பது புலப்படவில்லை. இதுபற்றி அமைச்சர் அவர்கள் மாவட் டக் கழகங்களுக்கு எழுதி உரிய படிநிலையைக் கடைப்பிடிக் கும்படி செய்வார் என்று நம்புகிறேன். தஞ்சை, செங்கற் பட்டு மாவட்டக் கழகங்களின் சார்பில் பணியாற்றும் தமிழா சிரியர்க்கு மட்டும் ஏன் Local Board படிநிலை கொடுக்கப்பட வேண்டும்? ஏனைய ஆசிரியர் தமக்கு அரசினர் படிநிலையாகிய உயர்ந்த படிநிலை கொடுக்கும்பொழுது, முதன்மொழி ஆசிரிய ராகிய தமிழாசிரியர்க்கு மட்டும் ஏன் குறைந்த படிநிலையாகிய Local Board படிநிலை கொடுக்கப்படுகிறது என்பதைப்பற்றி அறிந்து தக்க ஆணையிடுமாறு அரசினரைக் கேட்டுக் கொள் கிறேன். செங்கற்பட்டு, தஞ்சை, தென்னார்க்காடு ஆகிய மாவட்டக் கழகப் பள்ளிக்கூடங்களிற் பணியாற்றும் ஆசிரியர்

பலர் 10 அல்லது 14 ஆண்டுகள் ஊழியத்திறம் உடையவராக இருந்தும், அவரவர் இடத்தில் இன்னும் உறுதி செய்யப்படாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது. அவரை விரைவில் வேலையில் உறுதி செய்வதற்கு ஆவன செய்யுமாறு வற்புறுத்துகிறேன். மேலும், பத்தாவது வகுப்புவரை தமிழ் வகுப்புக்களைப் பெற்றிருக்கின்ற ஒவ்வோர் உயர்நிலைப்பள்ளியிலும் ஒவ்வொரு முதனிலைத் தமிழாசிரியராவது அமர்த்தப்படுமாறு உறுதிப் படுத்தவேண்டும். சிறப்பாகச், செங்கற்பட்டு மாவட்டத்தில் நாயக்கன்பேட்டை, மதுரமங்கலம், வெங்களத்தூர், ஆறுபாக்கம் போன்ற கழக உயர்நிலைப்பள்ளிகளில் முதல்நிலைத் தமிழாசிரியர் ஒருவர்கூட அமர்த்தப்படாமல் இருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்க்கு மொத்தத்தில் 23 அல்லது 24 பிரிவேளை ஆகிய 17 மணி பாடப்பணி இல்லையென்ற காரணத்தால், முதல்நிலை ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று கூறுவது சரியான அமைவாகாது. இப்பொழுது புதுவதாக வகுக்கப்பட்டுச் செயலுக்கு வந்திருக்கிற பாடதிட்டத்தின்படி எட்டாவது வகுப்பில் முன்னர் இருந்த 7 பிரிவேளை பாடவேளைக்கு மாறாக 6 பிரிவேளையே ஏற்பட்டு உள்ளது. அடுத்தடுத்து வருகின்ற ஆண்டுகளில் 9, 10–ஆம் வகுப்புக்களில் பிரிவேளைகள் குறையத்தான் செய்யும். 18 பிரிவேளைகளே வேலை பார்க்க வேண்டிய அளவுக்கு தமிழாசிரியர் ஒருவர் இருப்பாரேயானால், அதுகாரணமாக அவருக்கு முதல்நிலை ஊதியம் கொடுக்கப்படாமல் இருப்பது பொருந்தாது. எனவே, 17 மணி கட்டாயமாக வேலை பார்த்தால்தான் முதல்நிலை ஊதியம் பெறலாம் என்ற முறையினை அரசினர் தளர்த்தித்தர வேண்டும். சமற்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்பிக்கின்ற ஆசிரியர் இவ்வளவு பிரிவேளைகளாவது வேலை பார்க்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லாமலேயே முதல்நிலை ஊதியத்திற்கு உரியவராக ஏற்படுத்தப்பட்டு இருக்கிற நிலையில், முதல்மொழி ஆசிரியராகிய தமிழாசிரியர் இவ்வளவு பிரிவேளைகள் வேலை செய்தாலன்றி உயர்ந்த நிலை ஊதியம் பெறுர் என்று கூறுவது பொருந்தாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ○

ஒழுங்கிலான்!

உற்ற கல்வியும் ஓர்ந்த கேள்வியும்
பெற்று விளங்கும் பெற்றிய ஞயினும்,
ஒழுங்கிலான் ஒருவனை விலங்கே என்க!

— கனிச்சாறு.

எழுச்சிகொள்!

க. வண்ணத் தமிழ்த்தொண்டால் வாழ்வில் ஒளிசேர்க்கும்
எண்ணத்தை உள்ளத்தில் ஏற்ருயோ?—கண்ணற்ற
மாக்களென மாற்ருர் மதித்திடநாம் வாழ்வதிலே
ஆக்கமிலே என்றெழுச்சி கொள்.

உ. கட்டிய இல்லாளும் காதல் தலைமகனும்
பெட்டிப் பெரும்பொருளும் போதுமோ?—ஒட்டி
உலர்ந்த தமிழன்னை உள்மகிழ நாளும்
செலவாற்ற நீயெழுச்சி கொள்.

ங. தூங்கிக் கிடக்கையிலே தீந்தமிழா உன்தலையில்
ஓங்கி அடிக்கவரும் இந்திதனைத்—தாங்கிப்
புறம்விரட்டி தாய்தமிழைப் பேணுதற்கே நெஞ்சில்
அறமுரைக்கும் நல்லெழுச்சி கொள்.

ச. வாழ்வே அழிந்தாலும் வானே இடிந்தாலும்
தாழ்வின்றி நீயுழைத்துத் தேறலாம்—தாழ்விலாத்
தாய்மொழிக்கு வீழ்ச்சியெனில் தண்டரையில் வாழ்வதிலே
தூய்மையென்ன? நீயெழுச்சி கொள்,

ரு. தாய்மொழியைப் பேணுரைத் தாய்நாட்டைப் போற்ருரைத்
தூய்மனத்தோர் என்பாரோ தொல்தமிழர்—ஆய்ந்து கொளின்
தாய்மொழியே நல்லுயிராம் தாய்நாடே பொன்வீடாம்
வாய்மையென நீயெழுச்சி கொள்.

— தமிழ்முல்லை.

தனித் தமிழ்க் கண்ணோட்டம்.

—[பெருஞ்சித்திரன்]—

'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்' தமிழ் நிலம்.

'பதியெழு வறியாப் பழங்குடி' தமிழ்க்குடி.

ஆன்ற தமிழ்க்குடியின் சான்றோர் பல்கி நெறிப்பட்ட வாழ்வின் ஒளி மல்கியிருந்த நாடு இது. இத்தகைய ஒளி மண்டிக்கிடந்த நந்தமிழகத்து ஈண்டோ இருள் மண்டிக்கிடக்கின்றது. ஏய்ப்பும், மாய்ப்பும், காய்த்துக் கனிகின்றன. சமயக் கூச்சலும் சாதிக் காய்ச்சலும், செவிகளைத் துளைத்துச் சான்றோரின் நெஞ்சங்களைச் சுட்டெரிக்கின்றன. தண்டமிழ் மொழி சிதைந்து தன்னுருத்தெரியாமல் உலவுகின்றது. இவ்வாறு தமிழ்நாடு சீர்குலைந்தமைக்கு இரண்டு பொருட்டுக்களைக் கூறலாம். அரசியற் பொருட்டுறைகளில் தமிழர் ஏற்றங் குறைந்தமை, மொழித்துறையில் விழிப்பின்மை.

இவ்விரு இழுக்குகளில் முன்கூறியன, மக்களின் எழுச்சியோடும், புரட்சியோடும் முற்றுப்பெறுவன. பின் கூறிய மொழித்துறையின் வழுக்கலோ ஒரேயொரு முயற்சியால் யாண்டும் சீர்பெற வியலாததொன்றும். மொழித்துறையில் விழித்த கண்ணராயும், பழுத்த அறிஞராயும் விளங்கும் எண்ணற்றோர் கூடி முயலினும் வேர்இற்றுப்போகும் மொழியெனும் பெருமரத்தை எடுத்து நிறுத்துதல் அரிதினும் அரிதாம். ஆனால் இத்துறையில் மேம்பாடுற எல்லா மக்களினும் கண்ணோட்டமும் ஒன்றென இயங்குதல் நன்றும். எனினும் குறிப்பாகப் பிற்காலத் தமிழகத்தின் பெருந்தூண்களாக நிற்க முயலும், வாய்மையிற் றுலங்குந் தாய்மொழிப் பற்றுடைய மாணவர்தாம் யாவரினும் கண்பாடின்றிக் கருத்தினை இறுத்துதல் பெருத்த நன்மை பயக்கும். ஆதலின் அவரையே முன்னிருத்தி இதனைக் கூறப்புகுவேம்.

ஒரு நாடு சுற்றுச்சுவர் வைத்துத் தன்னைக் காத்துக்கொண்ட காலமும், ஒரு நாட்டின் மக்கள் தங்கைகளிற் கூரிய வில்லேந்தியும், கொல்லும் வாளேந்தியும் தாய்நாட்டைக் காத்தவண்ணமும், ஒரு நாட்டின் சான்றோர், அந்நாட்டு மொழியின் வளத்தைப் பழிமேவாமல் விழியால் காத்த வழியும் விண்ணேறின. இரு அச்சு முனையில் வாழும் மாந்தரும் ஒருவரோடொருவர் மருவும் உலகக்கலப்பே சிறந்தது என்னும் கொள்கை வலுப்பெற்ற காலம் இது.

அரசியல் அறிஞர் தந்தம் வெந்திறலாண்மையைக் காட்டவும், பொருளியல் வல்லார் இருள்வாழ் மக்கட் கொளிகாண ஏது வழியென்று கவலுறவும், மாந்தரைத் திருத்தும் சான்றோர் சிற்சிலர் மன்பதையின் ஏற்றத் தாழ்வுகளை எண்ணி எண்ணிக் கண்ணீர்வடித்து வருந்தவும், பசிப் பசி யென்றொருபால் பட்டினி மாந்தர் ஒட்டியுருளவும், விண்முட்டும் கவின் மனையில், ஏழிசைப் பண்முட்டும் செவியராயும், பால்விக்கும் தொண்டையராயும் ஒருசிலர் மலர்ப்படுக்கையில் படுத்துப் புரளவும் நேர்ந்த இக்காலத்தில் 'மொழி' யென்றும். அதுவே விழி யென்றும் அதிலும் 'தனித்த' தென்றும் அதுவே இனித்த தென்றும் இயம்பப் புகுந்ததேன் என்று வினவுவார்க்கு, இக்கட்டுரைக் கருத்தின் பொருத்தங்காட்டி மேலே போவோம்.

'ஒரு நாட்டை அழிக்க முதலில் அந்நாட்டின் மொழியை அழி' என்றார் ஓர் மூதறிஞர். தம்தம் உள்ளுணர்வால் எழுந்த கருத்துக்களைப்பிறர்க்குக் கூறித் தாம்தாம் கொண்ட உணர்வுகளை மற்றவர்க்கும் ஊட்டுவது மொழியேயாகலின், அம் மொழியே மக்களின் ஒற்றுமையுணர்விற்கும் தாய்நாட்டுப் பற்றிற்கும் வழி கோலுவதாகும் அன்றோ? இத்தகைய மொழியை மாற்றிவிடுவதினாலும் திரித்துவிடுவதினாலும் மக்களும் தம்தம் உணர்வுகளில் மாறுவர் என்றும், அவ்வாறு மாறின் தாய் மொழிப் பற்றிற் குன்றுவர் என்றும், அவ்வாறு குன்றின் தாய் நாட்டுப் பற்றிற்குலைவர் என்றும், இவ்வாறெல்லாம் நடக்குமே யாகில் மாந்தர்தம் பண்பாடும், உள்ளுணர்வும் சிதைந்து போகுமென்றும், கூறவும் வேண்டுங்கொல். இனிப் பண்பாடும் உள்ளுணர்வும் சிதைந்தொழியின் அடிமை யெண்ணமே தலையோங்கி நாட்டாண்மையில் எண்ணம் நாடாதெனவும் அறிந்துகொள்க. இதனாலன்றோ, பொருளிழுக்கினாலும், அரசியற் சருக்கல்களினாலும் மக்கள் வறுமைச் சேற்றிற் புதையுறுவதினாலும் நாட்டாட்சியை மாற்றும் பெரு நோக்கிற்கு அடிப்படை மொழியுணர்வை அவர்தம்மிடையே எழுப்பலும், அதன்வழியே இன உணர்வை அவர்தம் உள்ளத்தே தீக் கொளுவுதலும், அதன் முடிவில் நாட்டுவிடுதலைக்கு வித்திடுதலும், இத்தகைய வழியே யாரானும் அசைக்கொணா ஆழமான வழியெனலுமே நம்மின் பெருங்கொள்கையாம்.

இனித் தமிழ்மொழியென்னும், நன்னீர்ச்சுனையிற் கலந்த நச்சுப் பொய்கையாம் வடமொழி யென்னுஞ் சமற்கிருதத்தினால் நம் மொழி தன்னுருக்கரந்து இன்னிசை திரிந்து, அற்றை எழில் முற்றும் அழியத்தொடங்கிப் பாழ்பட்டுப் போகின்றதோடு

மொகலாய அரசர் தலையெடுத்தக்கால் உருது, பார்சி முதலிய மொழிச்சொற்கள் ஊடுருவிக் கலந்தும், ஆங்கில மன்னர் அடியெடுத்தக்கால் ஆங்கிலம், போர்த்துக்கீசு முதலிய மொழிச் சொற்கள் ஊர்ந்து வந்துலத்ததும், வரவர அவை பிரித்துணரா அளவுக்குப் பின்னிப் பிணைந்து போனதும் கண்கூடு. அத்தகைய கலப்பு மொழியாகிய ஒருமொழி அம்மொழிபேசும் மாந்தரின் விழிப்புணர்வுக்குப் பயன்படுமோ வென்னில். பயன்படாதென்க.

கலப்பு என்பது எத்துறையினும் மக்கள் முகஞ்சுளிக்கக் கூடியதொன்றே. தனித்த ஆ நெய்யோடு பல்வகைக் கொழுப் புருக்கியைக் கலந்தாலும், நல்ல புழுங்கல் அரிசியோடு புழுவும் கல்லையும் கலந்தாலும், நல்ல உயர்ந்த பட்டு நூலோடு நார் முதலிய நூல்களைக் கலந்தாலும், நல்லாவின் பாலோடு எருமைப் பாலையாகிலும், பால் தூளையாகிலும் கலந்தாலும் மக்கள் விரும்புவரோ? அவற்றை ஒன்றுமறியா பொதுமக்கட்கு நல்ல விலையில் விற்றுக் கொள்முதலை நல்முதலாக்கிக் கொள்ளை ஊதியம் பெறும் கள்ள வாணிகரேயன்றி, அவற்றை எவரே விரும்புவர்? இனி மொழித்துறையாலும் இத்தகைய சொற் கலப்பைக் கேட்ட அளவினுனே நெஞ்சு கூசவும், சொன்ன அளவினுனே நாக்கூசவும் செய்கின்ற அறிஞரும் அடியோடு வெறுப்பர்.

'இது என்ன வெற்றுரை. உலகிற் பெரும்பான்மையின ராற் பேசப்படுகின்ற ஆங்கிலமொழி பிறமொழிக் கலப்பினுல் உயர்வடையவில்லையோ' எனில் ஆங்கிலத்தில் பிறமொழிகளான கிரேக்கம், பிரஞ்சு, இலத்தீன், எபிரேயம் முதலிய எண்ணற்ற மொழிகள் வந்து கலந்ததாலேயே அது பெரும்பான்மையினரின் மொழியாகி விடவில்லை. ஆங்கிலேயர் தம் ஆட்சிக்கொடுங்கிய நாடுகளிலெல்லாம் ஆங்கிலத்தையே அரசியல் மொழியாக்கி, அவ்வந் நாட்டு மக்கள் படித்துணரும் கட்டாயத்தைப் புகுத்தினர் என்பதாலும், ஆங்கிலம் ஒரு முழுமையான மொழியாக வன்றிச் சொற்பெருக்கங் குறைந்த மொழியானதாலேயே பிறமொழிச் சொற்களை வலுவில் புணர்த்திக் கொண்டதே உண்மை என்பதாலும், அவ் வெதிர்க்கூற்றுப் பொய்த்துப் போம் என்றறிக. இதனுல் முன்னூறு ஆண்டுகட்கு முன்னிருந்த தனி ஆங்கில நூற்களை இற்றை ஆங்கிலங் கற்ருேர் அறியத் தொல்லையுறுதலும், தமிழ்மொழியில் அவ்வாறன்றி ஐயாயிர மாண்டுகட்கு முந்திய ஓரிரு கழகப் பாடல்கள் இன்றையும் படித்துப் பொருளுணருமாறு எளிதாகப் படுகின்றதும் எம் கூற்றுக்குத் துணை நிற்குமென்றறிக.

இனி ஒரு மொழி, கலப்பு மொழியாகத் திரிவதற்கு (அ) வெளிநாட்டோடு கொள்ளும் வாணிகத் தொடர்பும், சமயத்தொடர்பும் (ஆ) நாட்டாண்மையும், பெருங் காரணங்களாகும். வெளிநாட்டாரொடு கொண்ட வாணிகத் தொடர்பாலும், வெளிநாட்டார் குடியேற்றத்தாலும் மொழி கலப்புறுவதை எளிதே தடுக்க வியலாதாம். எனினும் மக்கள் மன்றில் கலக்கும் அக்கலப்புமொழியை நூல் எழுதும் அறிஞரும், கல்வி பயிற்றும் ஆசிரியரும் அறவே களைந்து தூயமொழியையே பயின்றுவரல் வேண்டும். அவ்வாறு களைய ஆற்றலில்லாதவரெல்லாம் நூற்கள் எழுதப் புகுந்தாலும், ஆசிரியராகக் கல்வி கற்பிக்கப் புகுந்தாலும் மொழி மேன்மேலும் கலப்புற வழி தந்ததுபோலாகும் என்க.

இனி மேற்கூறிய இருபெரும் பொருட்டுக்களையும் முறையே ஆய்வேம்.

(அ) வெளிநாட்டு வாணிகத்தொடர்பும் சமயத்தொடர்பும்.

தமிழகத்தில் கடைக்கழகக் காலத்திலேயே மக்களின் தமிழ்ப் பண்பு கெட்டது. தொல்காப்பியர் காலந்தொட்டே வடமொழி தமிழில் வழங்கிவந்ததென்பதற்கு,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
யெழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

எனவும்,

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

எனவும் வரும் தொல்காப்பிய நூற்பாக்களே காரணமாகும். பவுத்தமும், சமணமும் தமிழகத்திற்குள் வந்து புகுந்ததும் கடைக்கழகக் காலத்திலேயே, புத்தசமயத்தினர் மொழியாகிய பாலி மொழியும், சமணர் மொழியாகிய சமற்கிருதமும் அவர் சமய விரிவுரைகளிலும், அவர் எழுதிய சமய நூற்களிலும் வறிதே கலக்கப் பட்டன. வடமொழியைக் கலந்தே சமணர் எழுதினர். அவரால் தோற்றப்பெற்றதே மணிமிடை பவளம் என்ற மணிப்பிரவாள நடை. அவரது சமய நூலாகிய 'ஸ்ரீபுராணம்" என்னும் சமணநூல் முழுதும் இவ்விழி நடையிலேயே இயற்றப்பெற்றது. "—மற்றொரு நாள் வித்யாதி தேவதா பூஜா வ்யாஜத்தினால் ஒரு த்யானம் அடைந்து ஏகாந்தமாகத் தனது ஸ்வபா ரூபத்தைக் காட்டிப், பின்னரும் விச்வா ஸார்த்தமாகச் சூர்ண விவாத வ்ருத்தாந்தத்தினையுஞ் சொல்லிக் கரதல ஸ்பர்சன ஸுகம் அநுபவித்தபின்..." என்பது அவரது வர்த்தமானர் புராணத்தினின் றெடுக்கப்பட்ட

ஒரு சொற்றொடராகும். இவ்வாறு எழுதியதே தெய்வத் தன்மை பொருந்தியதெனவும், உயரிய இனிமையான நடை யெனவும் மக்களை நம்பச்செய்தனர். சமய மயக்கத்தால் முற்றுங் கல்லாத மாந்தரும் அவற்றை நம்பி, அந்த நடையையே இன்றுகாறும் வளர்த்து வருகின்றனர். மல்லிகை மலர்க் குவிய லுக்கிடையில் புல்லி எருக்கம் பூக்களைப் பெய்ததுபோன்ற இவ் விழிநடையைப் படித்த அளவானே கற்றவர் மனங்கசப்பர் அன்றோ?

பிற்காலத்து வந்த ஆங்கிலக் கண்காணியரும், கிறித்துவ சமயத்தை இந்நாட்டில் வித்திடுங்காலை பற்பல மேனாட்டுச் சொற்களைப் புணர்த்தினவகையை அவர்தம் மறைநூலைப் பார்ப் போர் எளிதில் உணர்வர்.

இனி வாணிக எண்ணங்கொண்டு பண்டைத் தமிழகத்துட் போந்து தமிழ்மக்களொடு கலந்தவர் கணக்கற்ற நாட்டாராவர். அதனைக்,

கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவன ரிருக்கையும்,

—எனவரும் சிலப்பதிகார அடிகளானும்,

யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்
மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும்
பாடலிற் பிறந்த பசும்பொன் வினைஞரும்
கோசலத் தியன்ற ஓவியத் தொழிலரும்

— எனப் பெருங்கதை இயம்புவதானும்,

மகத வினைஞரும், மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்,
தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடி...

— எனும் மணிமேகலைப் பகுதியானும்,

மொழிபல பெருகிய பழிதீர் தேஎயத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்...

— என பட்டினப்பாலை பேசுவதானும், அறியலாகும். இத் தகையோரும், மற்றையோரும் தமிழ்நாட்டவரோடு வந்து தொடர்புறுங்கால் பல்மொழி பயிற்றி வந்தாகல் வேண்டு மன்றோ?

ஆ. நாட்டாண்மை:

இனி ஆட்சிமன்றேறி அமைவார் வன்மையால் பல சொற்கள் ஆட்சிக் குட்படுத்தப்பெற்ற மொழியில் வந்து கலப்பதுமுண்டு. தமிழிலும் மொகலாயர் ஆட்சிக்காலத்தில்,

அசல் — முதல், படி
கிஸ்தி — திறை,
ஹூண்டி — பணச்சீட்டு,
குல்லா — தலைப்பாகை
கைலாகு — கைகொடுத்தல்
ஜமுக்காளம் — கம்பளம், விரிப்பு
சாகுபடி — பயிர் செய்தல்,
தபால் — அஞ்சல்,
தமாஷ் — பகடி, விளையாட்டு,
துப்பட்டா — மேற் போர்வை,
படுதா — திரைச்சீலை,
மாசூல் — விளைவு, வேளாண்மை

— முதலிய இந்துத்தானிச் சொற்களும்,

அலமாரி - நிலைப்பேழை
ஆபத் - இடர், தொல்லை,
இலாகா - ஆட்சி எல்லை,
கஜானா - கருவூலம்,
கம்மி - குறைவு,
கைதி - குற்றவாளி,
கிர்தாஸ் - கடிதாசி - தாள்,
கித்தான் - உரப்புத்துணி,
தக்ரார் - சிக்கல்,
தாலுக்கா - வட்டம்,
நகல் - படி
நபர் - ஆள்,
பாக்கி - நிலுவை,
பதில் - விடை, மாற்று,
பிராது - முறையீடு,
மைதான் - வெட்டவெளி,
வசூல் - தண்டல்,
வாரிசு - காணியாட்சி,
ஜில்லா - மாவட்டம்,
ஹல்வா - தேங்கூழ்,
ஷர்பத் - கனிச்சாறு

— முதலிய அராபியச் சொற்களும்,

ஹாஜர் - வருகை,
ஆசாமி - ஆள்
ஜாகை - வீடு,
தோடா - கைவளை
மாலுமி - கப்பலோட்டி, மீகாமன்,

— முதலிய உருதுச் சொற்களும்,

குமாஸ்தா - எழுத்தர்,
ராஜிநாமா - வேலைவிடுத்தம்,
வாபஸ் - திரும்பிப் பெறுதல்,
பஹில்வான் - மல்லன்,
புகார் - கோள்,
ரஸ்தா - சாலை,
சந்தா - கட்டணம்,
சவாரி - ஊர்தல், இவர்தல்,
தராசு - துலாக்கோல்,
சிபாரிஷ் - பரிந்துரை.
சர்க்கார் - ஆள்நர்,
பஞ்சாயத்து - ஐம்பேராயம்

— முதலிய உருதுச் சொற்களும், தமிழ் மக்களின் பேச்சுக்களில் இடம்பெற்று நூலேறி யின்றன. இன்னும் பிரான்சுக்காரர், போர்த்துக்கீசியர் முதலியோர் ஆட்சிக்காலங்களில்,

ஜன்னல் — காற்றுவாரி, பலகணி
ஆயா — செவிலி

— முதலிய போர்த்துக்கீசிய சொற்களும்,

குசின் — மடையறை. சமையலறை
பீரோ — அலுவலகம்

— முதலிய பிரஞ்சுச் சொற்களும் வந்து கலந்தன. சொற் கலப்பின் பெருக்கம், அவ்வவ் வாட்சிக் கால நீட்சிமையையும் அதனதன் வலித்தத்தையும் பொறுத்திருக்கின்றன வென்றறிக.

ஏறத்தாழ முந் நூற்று ஆண்டுக்காலம் தமிழ்நாட்டை ஆண்ட ஆங்கிலேயரின் வன்மையாலும், நாகரிக வளத்தாலும், நூற்றுக்கணக்கான ஆங்கிலச் சொற்கள் தமிழோடு அறக் கலந்துபோயின.

அவுன்ஸ், ஆபீஸ், ஆர்டர், கவுன்சில், கமிட்டி, கம்பெனி, ஜட்ஜ், கலெக்டர், பில், போர்டு, போலீஸ், முனிசிபாலிடி, கமிஷன், பாஸ், ஃபெயில், மார்க், எலெக்ஷன், ஓட், சர்டிபிகேட், மெம்பர், காலேஜ், ஸ்கூல், ஹெட்மாஸ்டர், ரைட்டர். கிளார்க். மிஷின், காங்கிரஸ், ஹாஸ்டல், சைக்கில், ஆர்மோனியம், கிராமபோன், டெலிபோன், பார்சல், மணியார்டர், பாங்க், போஸ்டாபீஸ், மைனர், டையம், அட்ரெஸ், பிளான், ஸ்லேட், ரூல், பாரம், பேப்பர். பென்சில், பென். காப்பி, காஃபி, கோட், ஷர்ட், பட்டன், பெயிண்ட், ஸெகண்ட், மினிட், பென்ஷன், கேஸ் சர்வீஸ், பிஸ்கட், கண்ராக்ட், டிரைவர். பர்ஜட், பர்லாங், மெயில், நைஸ், லெட்டர், பைப், புக், லேட் முதலிய எண்ணிறந்த ஆங்கிலச் சொற்கள் கல்லாத மக்கள் தம் வாய்களிலும் உறவாடுகின்றன.

(தொடரும்)

தென்மொழி வளர்ச்சிக்கு
உங்கள் பங்கைச்
செலுத்தி விட்டீரா?

தனித்தமிழ் வளர தென்மொழி
அச்சக நிறுவனத்திற்கு உதவுங்கள்.

பண்டாரகர்

மா. இராசமாணிக்கனார் எம்.ஏ.எம்.ஓ.எல்.

அவர்தம் அரிய நூல்கள்.

பழந்தமிழர் வாழ்வு முறைகளையும், வரலாற்றுச் சிறப்புக்களையும், ஆட்சி நெறிகளையும், கலைத் திறன்களையும் செப்பமாக எடுத்துக்கூறும் உயர் தமிழ் நூல்கள்.

இன்றே வாங்கிப் படித்துப் பயனடைக.

தமிழக வரலாறு	3—00
தமிழக ஆட்சி	2—00
தமிழகக் கலைகள்	2—50
தமிழர் நாகரிகமும் பண்பாடும்	2—50
சைவ சமய வளர்ச்சி	5—00
தமிழரசி (புதினம்)	2—50
நாட்டுக்கு நல்லவை (தமிழகப் பெண்மணி ஒருத்தியின் சீர்திருத்தச் செயல்களைக்கூறும் அருமையான புதினம்)	3—50

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59. பிராட்வே

சென்னை 1.

பதிவுஎண். எம். 7211

சேலத்தில் நீங்கள் மறவாத ஒன்று !

கண்ணன் ஓவியக் கூடம்

குகை, சேலம்—1

○

எழுத்து, உருவ விளம்பரப் பலகைகள்.

திரைப்பட விளம்பரக் கண்ணாடிகள்
(CINIMA SLIDES)

புத்தக அட்டைப்படங்கள்

முதலியவை தேவைப்படுகின்றனவா?

உடனே எழுதுங்கள்

(வெளியூர் வேலைகளை உடனே பார்க்கின்றோம்)

○

KANNAN CHITHRA SALAI,

TIRICHI ROAD,

GUGAI, SALEM—1.

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவரால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பெற்றுப், பெருஞ்சித்திரன் அவரை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பெற்றது.